# 3

# பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு

## 3.1 பொதுநோக்கு

மக்களின் ஒட்டுமொத்த நலனோம்புகையினை மேம்படுத்தும் நோக்கில் நாட்டிற்கான பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கான தூண்டுதல்கள் 2018ஆம் ஆண்டிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. இதனுடன் தொடர்புடைய முயற்சிகள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் அதேபோன்று பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பினை வழங்குதல் மற்றும் அவற்றை மேம்படுத்துதல் என்பவற்றை நோக்காகக் கொண்ட கொள்கை வழிமுறைகளை உள்ளடக்குகின்றன. உயர்ந்தளவான சராசரி பன்னாட்டு பெற்றோலிய விலைகளுடன் இசைந்துசெல்லும் வகையில் உள்நாட்டு சில்லறை விலைகளின் சீராக்கமின்மை மற்றும் ரூபாவின் பெறுமதித் தேய்வு என்பவற்றின் முக்கிய காரணமாக 2018இல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றம் கணிசமாகப் பலவீனமடைந்தது. உள்நாட்டு சில்லறைப் பெற்றோலிய உற்பத்திகளுக்காக 2018 மே மாதத்தில் உருவாக்கப்பட்ட செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் பொறிமுறையானது ஆண்டின் நான்காவது காலாண்டுப்பகுதியில் சில இடையூறுகளினால் பாதிக்கப்பட்டிருப்பினும் அதன்பின்னர் தொடர்ந்தது. பெற்றோலிய உற்பத்திகள் மீதான இலங்கையின் வரியானது அதனது பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து சார்பு ரீதியில் குறைவாகக் காணப்படுவதன் காரணத்தால் வரி சேகரிப்பினைப் பாதுகாப்பதற்காகவும் இத்தகைய முக்கியமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் செலுத்தவேண்டியுள்ள தொடர்ச்சியான நட்டங்களைத் தீர்ப்பதற்கும் பெற்றோலிய விலையிடல் சூத்திரத்தின் வினைத்திறனான அமுலாக்கலானது மிகவும் முக்கியமானதாகும். அதேவேளை ஆண்டுகாலப்பகுதியில் மின்வலுவிற்கான கேள்வியை பூர்த்திசெய்வதற்கான குறைந்த செலவிலான நீர்மின்வலு உருவாக்கத்திலிருந்தான அதிகரித்த பங்களிப்பிற்கு நீரேந்து பகுதிகளில் காணப்பட்ட சாதகமான மழைவீழ்ச்சி துணைபுரிந்திருந்தது. அதன்படி, இலங்கை மின்சார சபையினது நிதியியல் நிலைமையானது பலவீனமாகக் காணப்பட்ட போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து ஓர் முன்னேற்றத்தைப் பதிவு செய்திருந்தது. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறைந்த செலவு நீண்டகால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தினை 2018 யூன் மாதத்தில் அனுமதித்திருந்தது. எனினும், தாங்கக்கூடிய செலவில் தடங்கலற்ற வலு வழங்கலினை நிச்சயப்படுத்திக்கொள்வதானது நீடித்து நிலைத்துநிற்கும் மற்றும் உத்தமமான உருவாக்கல் கலவையை அனுமதிப்பதற்கு புதிய செயற்றிட்டங்களின் நடைமுறைகிடுதல் செயன்முறையினை துரிதப்படுத்துதலிலேயே தங்கியுள்ளது. எனினும், இலங்கை மின்சாரசபையின் நட்டங்களினால் வரிசெலுத்துவோருக்கு ஏற்படும் சுமையினை செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் சூத்திரம் ஒன்றினை அறிமுகப்படுத்துவதனூடாகக் குறைக்க வேண்டியுள்ளது. இது பயன்பெறுநர்கள் உண்மையான செலவினை செலுத்துவதற்கு உதவுகின்ற அதேவேளை இலக்கிடப்பட்ட குறைந்த வருமானம் பெறும் வீட்டுத்துறையினருக்கு உதவுதொகை வழங்கப்படும். ஆண்டுகாலப்பகுதியில் மொறகஹாகந்த நீர் மின்வலு செயற்றிட்டமானது ஆரம்பிக்கப்பட்ட அதேவேளை, உமா ஓயா மற்றும் மொறக்கொல்ல நீர் மின்வலு செயற்றிட்டங்களின் கட்டுமான நடவடிக்கைகள் தொடர்ந்தன. அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் குறிப்பாக உலகின் மிக வேகமாக வளர்ச்சியடைந்துவரும் முக்கிய 30 கொள்கலன் துறைமுகங்களில் ஒன்றாக கொழும்புத் துறைமுகமானது வரிசைப்படுத்தப்பட்டதன் முக்கிய காரணமாக துறைமுகத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் கணிசமான விரிவாக்கத்தைக் காட்டியிருந்தது. மேலும், சுற்றுலாப் பயணிகளின்

*வருகை அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டு விமானப் போக்குவரத்து நடவடிக்கைகள் ஆண்டுகாலப்பகுதியில் விரிவாக்கமொன்றை பதிவுசெய்தது. அதேவேளை, புகைவண்டிப் போக்குவரத்து மற்றும் வீதிப் போக்குவரத்து என்பன ஆண்டுகாலப்பகுதியில் மெதுவான செயலாற்றத்தைப் பதிவுசெய்ததுடன் பொதுப் போக்குவரத்தினை நோக்கி பொதுமக்களைக் கவருவதற்காகவும் வீதிப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவும் தேவையான மிகச் சிறந்த தரத்தினையுடைய போக்குவரத்துப் பணிகளுக்கான தேவைப்பாட்டைக் குறித்துக்காட்டியிருந்தது. வெளிச்சுற்று விரைவுப்பாதை மற்றும் மத்திய கடுகதி கட்டுமானங்களை உள்ளடக்கிய வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்களானவை தொடர்ந்த அதேவேளை ருவான்புர கடுகதி தொடர்பான சாத்திய ஆய்வும் நிறைவுசெய்யப்பட்டது. அதேவேளை, 2019இன் ஆரம்ப காலப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்ட கொழும்புத் துறைமுக நகர் செயற்றிட்டத்தின் நிலச்சீர்படுத்தல் வேலைகளை உள்ளடக்கிய நகர அபிவிருத்தி செயற்றிட்டங்களும் தொடர்ந்தன.*

*அரசாங்கமானது, தனியார் துறையின் ஆதரவுடன் நாட்டின் மனித மூலதனத்தை மேம்படுத்தும் நோக்கில் சுகாதாரம் மற்றும் கல்விப் பணிகளை தொடர்ச்சியாக வழங்கியிருந்தது. 2018 காலப்பகுதியில், '13 ஆண்டுகள் கட்டாயக் கல்வி' மற்றும் 'அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை பலப்படுத்துவதனூடாக கல்வித் தரத்தினை உயர்த்துவதற்கு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியிருந்த அதேவேளை தொற்றுநோய் மற்றும் தொற்றா நோய்களின் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கும் வழிமுறைகளை அரசாங்கம் எடுத்திருந்தது. ஆண்டுகாலப்பகுதியில் அரசாங்கம் நன்மையாளர்களை வலுவூட்டுதல் மற்றும் சிறந்த முறையில் இலக்குவைத்தல் என்பவை தொடர்பில் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் வினைத்திறனை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கான அதிகரித்த முயற்சிகளுடன் பாதிப்படையக்கூடிய மக்களின் நலனோம்புகையைப் பாதுகாப்பதற்கான இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது. பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதலில் மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளியானது பொதுச் செலவினத்தைக் கட்டுப்படுத்துகின்றமையினால் பொருளாதார உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கு அரச தனியார் பங்குடமையினை வசதிப்படுத்தவேண்டியுள்ள அதேவேளை, குறிப்பாக சுகாதாரம், பொதுக் கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகள் என்பவற்றின் தரங்களை உத்தரவாதப்படுத்துவதற்கான கட்டமைப்பை முன்னேற்ற வேண்டியமையானது முன்னோக்கிப் பார்க்கையில் முக்கியமான விடயங்களாகக் காணப்படுகின்றன.*

அட்டவணை 3.1
உட்கட்டமைப்பில் அரச முதலீடு

| ஆண்டு | பொருளாதாரப் பணிகள் | | சமூகப் பணிகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. மில். | மொ.உ.உ இன் % | ரூ. மில். | மொ.உ.உ இன் % | ரூ. மில். | மொ.உ.உ இன் % |
| 2014 | 330.1 | 3.2 | 112.3 | 1.1 | 442.5 | 4.3 |
| 2015 | 429.0 | 3.9 | 124.4 | 1.1 | 553.4 | 5.1 |
| 2016 | 424.0 | 3.5 | 117.3 | 1.0 | 541.3 | 4.5 |
| 2017 | 474.1 | 3.5 | 135.4 | 1.0 | 609.5 | 4.5 |
| 2018 (அ) | 437.9 | 3.3 | 133.2 | 1.0 | 571.1 | 4.3 |

(அ) தற்காலிகமானது


*மூலங்கள்:* நிதி அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## 3.2 பொருளாதார உட்கட்டமைப்பு கொள்கைகள், நிறுவன ரீதியான கட்டமைப்பு மற்றும் செயலாற்றம்

### பெற்றோலியம்

**2018ஆம் ஆண்டுப்பகுதியில் உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களிலும் வீழ்ச்சியடைவதற்கு முன்னதாக குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.** 2017இன் ஆரம்பப்பகுதியிலிருந்து பெற்றோலிய ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு அதன் வெளியீட்டு வணிகத்தினை நிறுத்தக்கூடுமென்ற எதிர்பார்ப்புக்களின் காரணமாக விலைகள் வீழ்ச்சியடைந்த அதேவேளை 2017 நடுப்பகுதியிலிருந்து 2018 மே மாதம் வரை மேல்நோக்கிய போக்கினைக் காட்டியது. எனினும், ஈரான் மீதான ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தகத் தடையின் காரணமாக ஏற்பட்ட நிரம்பல் கரிசனைகள் 2018 ஓகத்து நடுப்பகுதியிலிருந்து ஒத்தோபர் தொடக்கப்பகுதிவரை எண்ணெய் விலைகளில் மேல்நோக்கிய அதிகரிப்பொன்றைத் தோற்றுவித்தன. 2018 ஒத்தோபர் 4ஆம் நாளன்று பிறெண்ட் விலைகள் ஐ.அ.டொலர் 86 கொண்ட உச்ச விலையினை அடைந்ததுடன் இது 2014 ஒத்தோபருக்குப் பின்னரான மிக உயர்ந்த மட்டமாகக் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2018 நவெம்பரிலிருந்து பிறெண்ட் விலைகள் வீழ்ச்சியடைந்து செல்லும்போக்கைக் காட்டியமைக்கு உலகளாவிய இருப்புக்கள் கட்டியெழுப்பப்பட்டமை மற்றும் உலகின் மூன்று மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தியாளர்களான ஐக்கிய அமெரிக்கா, ருசியா மற்றும் சவூதி அரேபியா என்பனவற்றிலிருந்தான எண்ணெய் உற்பத்திகள் முன்னொருபோதுமில்லாத மட்டங்களை அடைந்தமை, எதிர்கால உலகளாவிய கேள்வி வளர்ச்சி தொடர்பில் குறிப்பாக சீனா மற்றும் முன்னேற்றங்கண்ட நாடுகள் பலவற்றினதும் குறைப்புப் பற்றிய நிச்சயமற்ற தன்மையுடன் சேர்ந்துகொண்டமை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. இதன்படி, 2018 ஒத்தோபரில் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 80.93 ஆகக் காணப்பட்ட பிறெண்டின் சராசரி விலைகள் 2018 திசெம்பரில் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர்

வரைபடம் 3.1 பெற்றோலியத் துறை நிழற்படம் - 2018





3

58.16இற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், சராசரியாக, பிறென்டின் விலை 2017இன் ஐ.அ.டொலா் 54.76 உடன் ஒப்பிடுகையில் 2018இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலா் 71.76இற்கு 31 சதவீதத்தினால் உயா்வடைந்தது.

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மசகெண்ணெய் இறக்குமதிகளின் சராசரி விலை உலகளாவிய மசகெண்ணெய் விலைகளுக்கு இணையாக நகா்ந்தது.** இதன்விளைவாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெயின் சராசரி விலை முன்னைய ஆண்டின் பீப்பாயொன்றிற்கான ஐ.அ.டொலா் 57.79இலிருந்து 2018இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலா் 76.25இற்கு 31.9 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை,இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் சராசரி இறக்குமதி விலை 2017இன் மெற்றிக்தொன்னொன்றுக்கு ஐ.அ.டொலா் 518.9 இலிருந்து 2018இல் மெற்றிக்தொன்னொன்றுக்கு ஐ.அ.டொலா் 650.2 இற்கு 25.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

**2018 மே மாதத்தில் செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடல் சூத்திரம் ஒன்றினை நடைமுறைப்பட்டதனைத் தொடா்ந்து 2018 காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விலைகள் காலத்திற்குக்காலம் திருத்தியமைக்கப்பட்டன.** இதன்படி, 2018 மே மாதத்தின் தொடக்கத்திலிருந்து இவ்வாண்டுப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலியம், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் உற்பத்திகளின் சில்லறை விலைகள் ஒன்பது தடவைகள் திருத்தியமைக்கப்பட்டன. இதன்விளைவாக, பெற்றோலிய விலைகள் (92 ஒக்டெயின்) 2017 இறுதியின் லீற்றரொன்றிற்கான ரூ.117 உடன் ஒப்பிடுகையில் 2018 இறுதியில் லீற்றரொன்றுக்கு ரூ.125 ஆகக் காணப்பட்ட வேளையில் ஊா்திகளுக்கான

வரைபடம் 3.2
பன்னாட்டுச்சந்தையில் மசகு எண்ணெயின் (பிறென்ட்) சராசரி விலை மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெயின் இறக்குமதி விலை




*மூலங்கள்:* புளூம்பேர்க்
இலங்கைத் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

டீசலின் விலை 2017 இறுதியில் லீற்றரொன்றிற்கான ரூ.95 உடன் ஒப்பிடுகையில் 2018 இறுதியில் லீற்றரொன்றுக்கு ரூ.101 ஆகக் காணப்பட்டது. மண்ணெண்ணெயின் விலை ஆரம்பத்தில் லீற்றரொன்றுக்கு ரூ.101இற்கு அதிகரிக்கப்பட்ட போதும் குடித்தொகையில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய பிரிவினா் மற்றும் மீன்பிடித் துறையினா் மீதான அளவுக்கதிகமான விலை அழுத்தத்தினை பரிசீலனையில் கொண்டு அரசாங்கம் 2018 யூனிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மண்ணெண்ணெயின் விலையினை லீற்றரொன்றுக்கு ரூ.70இற்குக் குறைத்ததுடன், அதன்பின்னா் அதே மட்டத்தில் பேணியது. அதேவேளை, உலை எண்ணெய் விலைகளும் 2017 இறுதியில் காணப்பட்ட லீற்றரொன்றுக்கான ரூ.80 உடன் ஒப்பிடுகையில் 2018 இறுதியில் லீற்றரொன்றுக்கு ரூ.92இற்கு அதிகரிக்கப்பட்டது.

**வலு உருவாக்கத்துறையிலிருந்தான கேள்வி வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக 2018இல் பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனை வீழ்ச்சியடைந்தது.** இவ்வாண்டுப்பகுதியில், பெற்றோலியத்தின் உள்நாட்டு விற்பனைகள் முன்னைய ஆண்டன் ஒப்பிடுகையில் 6.9 சதவீதத்தினால் அதிகரித்தன. உந்து ஊா்திகளின் இறக்குமதியில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்பு இதற்கு கணிசமானதொரு காரணமாகும். அதேவேளை, டீசலின் உள்நாட்டு விற்பனை 8.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு அதிகரித்த நீா் மின்வலு உருவாக்கத்தின் விளைவாக எரிபொருள் எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கம் குறைவடைந்தமையே காரணமாகும். எனவே, 2018இல் வலு உருவாக்கத்துறைக்கான பெற்றோலிய விற்பனைகள் முன்னைய ஆண்டிலும் பாா்க்க 34.0 சதவீதம் குறைவாகக் காணப்பட்டது. 2018இல் மண்ணெண்ணெய் விற்பனைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 30.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டியது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில், போக்குவரத்து மற்றும் வான் போக்குவரத்துத் துறைகளுக்கான பெற்றோலிய விற்பனைகள் முறையே 1.8 சதவீதத்தினாலும் 9.3 சதவீதத்தினாலும் வளா்ச்சி கண்டன.

**உலகளாவிய எண்ணெய் விலைகள் உயா்வடைந்தமை, ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா தேய்வடைந்தமை மற்றும் 2018 மே மாதம் வரை பெற்றோலியத்தின் உள்நாட்டு சில்லறை விலைகள் சீராக்கம் செய்யப்படாமை என்பனவற்றிற்கு மத்தியில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றம் கணிசமானளவிற்குத் தேய்வடைந்தது.** கணக்காய்வு செய்யப்படாத தற்காலிக நிதியியல் கூற்றுக்களின்படி, 2017இன் ரூ.3.4 பில்லியன் இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.104 பில்லியன் தொழிற்பாட்டு நட்டத்தினை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிக்கையிட்டது.

அட்டவணை 3.2

## பெற்றோலியத் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2017 (அ) | 2018 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) 2017 (அ) | வளர்ச்சி வீதம் (%) 2018 (ஆ) |
|---|---|---|---|---|
| இறக்குமதிகளின் அளவு ('000 மெ.தொ) | | | | |
| மசகு எண்ணெய் | 1,591 | 1,674 | -5.6 | 5.2 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | 4,895 | 4,959 | 26.0 | 1.3 |
| நிலக்கரி | 2,530 | 2,167 | 5.1 | -14.3 |
| திரவப் பெற்றோலிய வாயு | 387 | 413 | 12.2 | 6.7 |
| உள்நாட்டு திரவப் பெற்றோலிய வாயு உற்பத்தி ('000 மெ.தொ) | 19 | 22 | 119.7 | 13.7 |
| இறக்குமதிகளின் பெறுமதி (ச.உ.செ) | | | | |
| மசகு எண்ணெய் (ரூ.மில்) | 107,397 | 160,024 | 23.5 | 49.0 |
| (ஐ.அ.டொ.மில்) | 704 | 978 | 18.1 | 38.9 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் (ரூ.மில்) | 375,374 | 475,521 | 52.4 | 26.7 |
| (ஐ.அ.டொ.மில்) | 2,462 | 2,937 | 45.9 | 19.3 |
| நிலக்கரி (ரூ.மில்) | 39,699 | 38,750 | 38.4 | -2.4 |
| (ஐ.அ.டொ.மில்) | 261 | 237 | 32.9 | -9.5 |
| திரவப் பெற்றோலிய வாயு (ரூ.மில்) | 35,505 | 43,162 | 46.7 | 21.6 |
| (ஐ.அ.டொ.மில்) | 233 | 266 | 40.1 | 14.0 |
| மசகு எண்ணெயின் சராசரி விலை (ச.உ.செ) | | | | |
| (ரூ./பீப்பாய்) | 8,817 | 12,475 | 30.5 | 41.5 |
| (ஐ.அ.டொ./பீப்பாய்) | 57.79 | 76.25 | 24.8 | 31.9 |
| பெற்றோலிய ஏற்றுமதிகளின் தொகை ('000 மெ.தொ) | 972 | 1,093 | 20.4 | 12.5 |
| பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி (ரூ.மில்) | 66,280 | 101,467 | 58.6 | 53.1 |
| (ஐ.அ.டொ.மில்) | 434 | 622 | 51.4 | 43.2 |
| உள்நாட்டு விற்பனைகள் - சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ('000 மெ.தொ) | 5,379 | 5,273 | 9.0 | -2.0 |
| இதில் பெற்றோல் (92 ஒக்டேன்) (இ) | 1,109 | 1,179 | 7.1 | 6.4 |
| பெற்றோல் (95 ஒக்டேன்) | 168 | 189 | 23.0 | 12.3 |
| தன்னியக்க டீசல் | 2,194 | 1,987 | 2.4 | -9.5 |
| சிறப்பு டீசல் | 92 | 101 | 21.5 | 10.6 |
| மண்ணெண்ணெய் | 161 | 210 | 17.4 | 30.4 |
| உலையெண்ணெய் | 1,040 | 949 | 27.3 | -8.8 |
| அவுட்டூர் | 456 | 499 | 7.4 | 9.3 |
| நப்தா | 139 | 137 | 15.9 | -1.6 |
| உள்நாட்டு விற்பனைகள் - திரவப் பெற்றோலிய வாயு ('000 மெ.தொ.) | 412 | 435 | 15.6 | 5.7 |
| உள்நாட்டு விலை (காலமுடிவில்) (ரூ/லீற்றர்) | | | | |
| பெற்றோல் (92 ஒக்டேன்) | 117.00 | 125.00 | 0.0 | 6.8 |
| பெற்றோல் (95 ஒக்டேன்) | 128.00 | 149.00 | 0.0 | 16.4 |
| தன்னியக்க டீசல் (ஈ) | 95.00 | 101.00 | 0.0 | 6.3 |
| சிறப்பு டீசல் | 110.00 | 121.00 | 0.0 | 10.0 |
| மண்ணெண்ணெய் | 44.00 | 70.00 | -10.2 | 59.1 |
| உலையெண்ணெய் | | | | |
| 800 செக்கன்கள் | 82.20 | 92.00 | 0.0 | 11.9 |
| 1,500 செக்கன்கள் | 80.00 | 96.00 | 0.0 | 20.0 |
| 3,500 செக்கன்கள் | 80.00 | வி.கி | 0.0 | வி.கி |
| திரவப் பெற்றோலிய வாயு (ரூ/கி.கி) | | | | |
| லிட்றோ வாயு | 114.48 | 138.64 | 8.3 | 21.1 |
| லாவ்ஸ் வாயு | 114.48 | 138.64 | 8.3 | 21.1 |
| பன்னாட்டு சந்தை மசகு எண்ணெய் விலைகள் (ஐ.அ.டொலர்/ பீப்பாய்) | | | | |
| பிறெண்ட் | 54.76 | 71.76 | 21.6 | 31.0 |
| வெஸ்ட் டெக்ஸாஸ் இன்டர்மீடியட் | 50.92 | 64.99 | 17.4 | 27.6 |
| உலக எண்ணெய் நிரம்பல் (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்) | 97.4 | 100.1 | 0.5 | 2.8 |
| உலக எண்ணெய் கேள்வி (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்) | 98.0 | 99.2 | 1.9 | 1.3 |

(ச.உ.செ - சரக்கு கட்டணம் உள்ளடங்கலான செலவுகள்
(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) எக்ஸ்ரா பிரிமியம் யூரோ 3 உள்ளடங்கலாக
(ஈ) எக்ஸ்ராமைல் டீசல் உள்ளடங்கலாக

*மூலங்கள்:* இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி.
வரையறுக்கப்பட்ட லங்கா மராயன் (தனியார்) சேவிஸ் கம்பனி
வரையறுக்கப்பட்ட லிட்றோ காஸ் லங்கா கம்பனி
வரையறுக்கப்பட்ட லாவ்ஸ் காஸ் பீ.எல்.சீ
இலங்கைச் சுங்கம்
புளூம்பேர்க்
பன்னாட்டு வலு முகவர்

ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா தேய்வடைந்தமையானது 2018ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ரூ.82.7 பில்லியன் கொண்ட நட்டத்தை ஏற்படுத்திய வேளையில் வலு உருவாக்கத்துறையிலிருந்தான குறைந்த கேள்வியும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருமானம் குறைவடைவதற்கு பங்களித்தது. அரச வங்கிகளுடனான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ரூபா வைப்புக்கள் 2017 இறுதியின் ரூ.5.0 பில்லியனிலிருந்து 2018 இறுதியில் ரூ.67.9 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்ட போதும் வங்கித்தொழில் துறைக்கான மொத்த பொறுப்புக்கள் இவ்வாண்டுப்பகுதியில் ரூ.116.2 பில்லியனால் ரூ.293.2 பில்லியனுக்கு அதிகரித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட கடன்பாடுகளின் தாக்கத்தை பெருமளவிற்குப் பிரதிபலித்தது. மேலும், அரச நிறுவனங்களிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வரவேண்டிய வர்த்தகப் பெறுகைகள் 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.81.7 பில்லியனுக்கு ரூ.10.4 பில்லியனால் குறைவடைந்தது. 2018 இறுதியிலுள்ளவாறு இலங்கை மின்சாரசபை மற்றும் சிறிலங்கன் எயர்லைன்ஸ் என்பன இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெறத்தக்க மொத்த வர்த்தகத்தில் முறையே 58.3 சதவீதத்திற்கும், 31.3 சதவீதத்திற்கும் வகைகூறின.

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட பாரிய நட்டங்கள் அதன் நிதியியல் ஆற்றல் வாய்ந்த தன்மையை உறுதியானதொரு அடிப்படையில் வலுப்படுத்தவேண்டியதன் அவசியத்தினை எடுத்துக்காட்டுகின்றன.** இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒன்றுசேர்ந்த நிதியியல் நட்டங்கள் அரசின் நிதியியல் சூழலுக்கு தொடர்ந்தும் சுமையாகக் காணப்பட்ட வேளையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் நிதியியல் பற்றாக் குறையினை ஈடுசெய்வதற்காக மேற்கொண்ட உயர்ந்த கடன்பாடுகள் வங்கித் தொழில் துறையையும் பாதித்தன. ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபா கடுமையாகத் தேய்வடைந்தமையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கு குறிப்பிடத்தக்க நட்டங்களை உருவாக்கி அதன் வழிவந்த படுகடனை மேலும் உயர்த்தியது. எனவே, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகள் அவசியமாகவிருக்கின்ற வேளையில் செலாவணி வீதத் தளம்பல்களுக்கு இது பாதிக்கப்படக்கூடிய தன்மையினைக் குறைப்பதற்கும் வழிமுறைகள் எடுக்கப்படவேண்டும். தேசிய மின்சார தொகுதியுடன் மிகக்கூடுதலான வீட்டலகுகள் இணைக்கப்பட்டு இருப்பதனால் மண்ணெண்ணெய்க்கான கேள்வி வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்ட போதும்

3


மண்ணெண்ணெயின் நுகர்வு 2015 இலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. குறைந்த வருமான வீட்டலகுகளுக்கும் மீன்பிடித் துறைக்கும் ஆதரவளிக்கும் நோக்குடன் உதவுதொகை அளிக்கப்பட்ட விதத்தில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுகின்றதெனினும் உண்மையில் தேவைப்படாத நன்மைபெறுநர்களுக்கான உதவுதொகையின் மூலம் மண்ணெண்ணெய் தவறாகப் பயன்படுத்தப்படுவதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றம் தேய்வடைந்து போவதற்கு பங்களிப்பதாகவுள்ளது. ஆகவே, மண்ணெண்ணெய் விலை உதவுதொகையினை இலக்கிடப்பட்ட காசு உதவுதொகையாக மாற்றுவது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் சுமையினை ஓரளவிற்குக் குறைக்கும். மேலும், தனியார் துறை முதலீடுகளின் ஆதரவுடன் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு நிரம்பலை அதிகரிப்பதற்கு இலங்கையின் எண்ணெய் சுத்திகரிப்பு இயலாற்றலை மேம்படுத்துவது அவசியமாகும். எனவே, சபுகஸ்கந்த சுத்திகரிப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களை வெளியில் அனுப்புகின்ற வழிகளின் இயலாற்றலை அதிகரித்தல் அதேபோன்று தரம்குறைந்த மசகெண்ணெயினை பெறுமதி கூடிய பெற்றோலிய உற்பத்திகளுக்கு மாற்றுகின்ற சுத்திகரிப்பிற்கு முதலீடுகளை மேற்கொள்ளுதல் என்பன நாட்டின் வலுப் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கு அவசியமாகவிருப்பதுடன் வெளிநாட்டு விலை அதிர்வுகளை மட்டுப்படுத்துவதற்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நட்டங்களை குறைப்பதற்கும் அவசியமானவையாகும். மேலும், பெற்றோலிய உற்பத்திகள் மீது தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கு உள்நாட்டு பெற்றோலிய விலைகளில் காத்திரமான சீராக்கங்களை மேற்கொள்வது மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்வலு உருவாக்கங்களை அதிகரிப்பது போன்ற வழிமுறைகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றத்திற்கு உதவியாக அமையும்.

**2018ஆம் ஆண்டுப்பகுதியில் பெற்றோலிய மூலவளங்கள் அபிவிருத்திச் செயலகம் எண்ணெய் மற்றும் வாயு அகழ்வு நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது.** 2018 மே மாதத்தில் நாட்டின் கரைக்கு அப்பாலான அகழ்வு தரவு களஞ்சியப்படுத்தும் இயலாற்றலை அதிகரிப்பதற்காக குளோபல் ஓயில் பீல்ட் சேவிஸின் துணை நிறுவனத்துடன் ஒப்பந்த அடிப்படையில் அம்பிர்லா மல்ரி கிளயன்ட் உடன்படிக்கையொன்றை அரசாங்கம் செய்துகொண்டது. இவ்வுடன்படிக்கையின் கீழான அளவீட்டு தொழிற்பாடுகள் ஜே.எஸ்.05, ஜே.எஸ்.06, காவேரி வடிநிலம், லங்கா வடிநிலம் மற்றும் மன்னார் வடிநில துண்டுகளிலுள்ள 5,000 வழி-கி.மீற்றர், 250 வழி - கி.மீற்றர், 500 வழி - கி.மீற்றர் மற்றும் 2,500 வழி - கி.மீற்றர் என்பனவற்றை கையேற்பது தொடர்பான விபரமான தரவுகளுடன் 2018இல் நிறைவடைந்தன. மன்னார் வடிநிலத்தின் துண்டு எம்2 இலுள்ள திரவ இயற்கை வாயுவின் வர்த்தக ரீதியான உற்பத்தியின் பொருட்டு மிகப் பொருத்தமான நிறுவனமொன்றைக் கண்டறிவதற்காக விலைக் குறிப்பீடு ஒன்றை மிதக்கவிடுவதற்கு 2018இல் அமைச்சரவை ஒப்புதலை வழங்கியிருக்கிறது. இதன்படி, 2019 சனவரியில் விலைக்குறிப்பீடு மிதக்கவிடப்பட்டதுடன் 2019 ஓகத்தில் வெற்றிகரமான விலைக் குறிப்பீட்டாளருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## மின்வலு

**நீர் மின்வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் உதவியுடன் 2018இல் மின்வலு உருவாக்கம் தொடர்ச்சியாக விரிவடைந்தது.** 2017இன் 3.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைத் தொடர்ந்து மொத்த மின்வலு உருவாக்கம் 15,255 கி.வா.ம இற்கு 4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. சிறிய நீர் மின்வலு உற்பத்திகள் நீங்கலாக, நீர் மின்வலு உருவாக்கத்தின் பங்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் 5,149 கி.வா.ம இற்கு 68.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினை பதிவுசெய்து, இவ்வாண்டுப்பகுதியில் நீரேந்து பகுதிகளில் கிடைக்கப்பெற்ற உயர்ந்த மட்ட மழை வீழ்ச்சியினை பிரதிபலித்தது. அதிகரித்த நீர் மின்வலு உருவாக்கத்துடன், எரிபொருள் எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்ட மொத்த வலு உருவாக்கம் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 3,626 கி.வா.ம இற்கு 28.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் நிலக்கரி வலு உருவாக்கம் 4,764 கி.வா.ம இற்கு 6.7 சதவீதத்தினால் குறைவடைந்தது. நிலக்கரி வலு உருவாக்கம் வீழ்ச்சியடைந்தமைக்கு நுரைச்சோலை நிலக்கரி வலுப் பொறி பழுதடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, மரபுவழியல்லா புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களினூடான வலு உருவாக்கம் 1,716 கி.வா.ம இற்கு 17.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு சிறிய நீர் மின்வலு உருவாக்கம் 1,203.4 கி.வா.ம இற்கு 27.3 சதவீதத்தினால் அதிகரித்தமையும் சூரியவலு உருவாக்கம் 2017இன் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 98.2 கி.வா.ம இற்கு 15.3 சதவீதத்தினால் அதிகரித்தமையும் காரணங்களாகும். இதன்படி, மொத்த வலு உருவாக்கத்தில் நீர் மின்வலு, எரிபொருள் எண்ணெய், நிலக்கரி மற்றும் மரபுவழியல்லா புதுப்பிக்கத்தக்க வலு உருவாக்கத்தின் பங்குகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் முறையே 34 சதவீதம், 24 சதவீதம், 31 சதவீதம் மற்றும் 11 சதவீதமாகவும் காணப்பட்டன. இலங்கை மின்சார சபையினால் உருவாக்கப்பட்ட வலுவின் பங்கு 2017இன் 72.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 77.4 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில், எஞ்சிய பங்கு சுயாதீனமான வலு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. மொத்த வலு உருவாக்கத்தின் சதவீதமாக மின் கடத்தல் மற்றும் விநியோகத்தில் ஏற்பட்ட ஒட்டுமொத்த இழப்பு முன்னைய ஆண்டின் 8.5 சதவீதத்திலிருந்து

வரைபடம் 3.3
**மின்வலு உருவாக்கத்தின் கலவை**




*மூலம்:* இலங்கை மின்சார சபை

2018இல் 7.6 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த மின்வலு விற்பனை 2017ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 13,430 கி.வா.ம உடன் ஒப்பிடுகையில் 14,100 கி.வா.ம இற்கு 5.0 சதவீதத்தினால் அதிகரித்தது. 'வீட்டு மற்றும் மத வழிபாட்டு' வகைக்கான மின்வலு விற்பனை, 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் நுகர்வோர் எண்ணிக்கை 2.6 சதவீதத்தினால் உயர்வடைந்தமையுடன் 3.9 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, 'கைத்தொழில்' மற்றும் 'பொதுவான நோக்கங்கள்' ஆகிய வகைகளுக்கான விற்பனைகள் முறையே 30.5 சதவீதம் மற்றும் 20.8 சதவீதங்களுக்கு வகைகூறி 2018இல் முறையே 6.4 சதவீதம் மற்றும் 5.7 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

**இலங்கை மின்சார சபையின் நிதியியல் செயலாற்றம் 2018இலும் நலிவடைந்தே காணப்பட்டது.** நீர் மின்வலு உருவாக்கம் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்ட போதும் வெப்ப மின்வலு உருவாக்கத்தின் உயர்ந்த செலவின் காரணமாக உறப்பட்ட நட்டங்களை எதிரீடு செய்வதற்கு இது போதுமானதாகவில்லை. கணக்காய்வு செய்யப்படாத தற்காலிக நிதியியல் கூற்றின்படி, இலங்கை மின்சார சபை 2017இன் ரூ.46.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.28.9 பில்லியன் கொண்ட வரிக்கு முன்னரான நட்டத்தைப் பதிவுசெய்தது. அதிகரித்த நீர் மின்வலுக் கிடைப்பனவினைத் தொடர்ந்து வலு உருவாக்கத்திற்கான எரிபொருள் எண்ணெயின் தேவைப்பாடு குறைவாகவிருந்தமையின் காரணமாக 2018இல் எரிபொருள் மீதான இலங்கை மின்சாரசபையின் செலவு ரூ.41.6 பில்லியனுக்கு 28.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவடைந்தது. எனவே, விற்பனை மையத்தில் மின்வலுவின் ஒட்டுமொத்த சராசரிச் செலவு 2017இன் கி.வா.ம ஒன்றிற்கான ரூ.20.06 உடன் ஒப்பிடுகையில் 2018இல் கி.வா.ம ஒன்றிற்கு ரூ.19.13 இற்கு குறைவடைந்த வேளையில், 2018 இறுதியிலுள்ளவாறு ஒட்டுமொத்த சராசரித் தீர்வை முன்னைய ஆண்டின் கி.வா.ம ஒன்றிற்கான ரூ.16.49 உடன் ஒப்பிடுகையில் கி.வா.ம ஒன்றிற்கு ரூ.16.30 ஆகக் காணப்பட்டது. ஆண்டுப்பகுதியில் விற்பனை மையத்தில் மின்வலுவின் சராசரிச் செலவு வீழ்ச்சியடைந்தபோதும் இது ஒட்டுமொத்த சராசரித் தீர்வையினைவிட மேலே தொடர்ந்தும் காணப்பட்டு இத்துறையில் செலவைப் பிரதிபலிக்கும் விலையிடல் ஒன்றிற்கான தேவையினை எடுத்துக்காட்டியது. 2018 இறுதியிலுள்ளவாறு வீடு, பொதுவான நோக்கம், அரசாங்கம், கைத்தொழில் மற்றும் சுற்றுலா விடுதிகளுக்கு

3

அட்டவணை 3.3
**மின்வலுத் துறையின் செயலாற்றம்**

| விடயம் | 2017 | 2018 (அ) | வளர்ச்சி வீதம் (%)) 2017 | வளர்ச்சி வீதம் (%)) 2018 (அ) |
|---|---|---|---|---|
| நிறுவப்பட்ட இயலளவு (மெ.வா.) | 4,138 | 4,085 | 3.0 | -1.3 |
| நீர்மின் (ஆ) | 1,384 | 1,391 | 0.0 | 0.5 |
| எரிபொருள் எண்ணெய் (இ) | 1,293 | 1,220 | 6.4 | -5.6 |
| நிலக்கரி | 900 | 900 | 0.0 | 0.0 |
| பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு (ஈ) | 561 | 573 | 8.2 | 2.1 |
| உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் (கி.வா.ம.) | 14,671 | 15,255 | 3.7 | 4.0 |
| நீர்மின் (ஆ) | 3,059 | 5,149 | -12.1 | 68.4 |
| எரிபொருள் எண்ணெய் (இ) | 5,045 | 3,626 | 13.1 | -28.1 |
| நிலக்கரி | 5,103 | 4,764 | 1.1 | -6.7 |
| பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு (ஈ) | 1,464 | 1,716 | 26.2 | 17.3 |
| இலங்கை மின்சார சபையின் மொத்த விற்பனைகள் (கி.வா.ம.) | 13,430 | 14,100 | 5.0 | 5.0 |
| வீடு மற்றும் வணக்கத்தலம் | 4,463 | 4,641 | 4.5 | 4.0 |
| கைத்தொழில் | 4,041 | 4,298 | 4.6 | 6.4 |
| பொது நோக்கம் மற்றும் உணவு விடுதி (உ) | 3,222 | 3,412 | 7.9 | 5.9 |
| தெரு விளக்குகள் | 108 | 108 | -0.3 | 0.0 |
| லங்கா மின்சாரக் கம்பனிக்கு மொத்த விற்பனை | 1,595 | 1,640 | 2.7 | 2.8 |
| லங்கா மின்சாரக் கம்பனியின் விற்பனை (கி.வா.ம.) | 1,518 | 1,564 | 3.6 | 3.0 |
| வீடு மற்றும் வணக்கத்தலம் | 629 | 640 | 2.6 | 1.7 |
| கைத்தொழில் | 281 | 288 | 1.8 | 2.5 |
| பொது நோக்கம் மற்றும் உணவு விடுதி (உ) | 586 | 614 | 6.0 | 4.8 |
| தெரு விளக்குகள் | 22 | 22 | -4.3 | 0.0 |
| இலங்கை மன்சார சபையின் திரண்ட ஊடுகடத்தல் மற்றும் பங்கீட்டு இழப்பு (%) | 8.5 | 7.6 | -11.5 | -11.0 |
| பாவனையாளர்களின் எண்ணிக்கை ('000) (ஊ) | 6,741 | 6,916 | 3.7 | 2.6 |
| இதில் வீடு மற்றும் வணக்கத்தலங்கள் | 5,923 | 6,051 | 3.3 | 2.2 |
| கைத்தொழில் | 64 | 66 | 3.7 | 3.1 |
| பொது நோக்கம் மற்றும் உணவு விடுதி (உ) | 751 | 796 | 6.7 | 6.0 |

(அ) தற்காலிகமானது
(ஆ) சிறிய நீர் மின்வலு நிலையம் நீங்கலாக
(இ) சுயமான வலு உற்பத்தியாளர்கள் உள்ளடங்கலாக
(ஈ) சிறிய நீர்மின் உள்ளடங்கலாக பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலுவைக் குறிக்கிறது
(உ) அரச துறையிற்கான விற்பனைகள் உள்ளடங்கலாக
(ஊ) லங்கா மின்சார கம்பனியின் நுகர்வோர் உள்ளடங்கலாக


*மூலங்கள்:* இலங்கை மின்சார சபை
வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி

இலங்கை மின்சபையினால் விதிக்கப்பட்ட சராசரி மின்வலுத் தீர்வை முறையே கி.வா.ம ஒன்றிற்கு ரூ.13.60 ஆகவும் ரூ.23.78 ஆகவும் ரூ.18.24 ஆகவும் ரூ.14.72 ஆகவும் ரூ.17.61 ஆகவும் காணப்பட்டது. அதேவேளை, முக்கியமாக வங்கித்தொழில் துறை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சுயாதீனமான வலு உற்பத்தியாளர் ஆகியோருக்கான இலங்கை மின் சபையின் குறுங்காலப் பொறுப்புக்கள் 2017 இறுதியின் ரூ.138.0 பில்லியனிலிருந்து 2018 இறுதியில் ரூ.141.1 பில்லியனுக்கு அதிகரித்தது. முக்கியமாக வங்கித்தொழில் துறைக்கான இலங்கை மின்சாரசபையின் நீண்டகாலப் பொறுப்புக்கள் 2017 இறுதியின் ரூ.319.6 பில்லியனிலிருந்து 2018 இறுதியில் ரூ.392.2 பில்லியனுக்கு அதிகரித்தது. இலங்கை மின்சார சபையின் பலவீனமான நிதியியல் நிலைமை மற்றும் அரச வங்கிகளின் ஐந்தொகையின் மீதான அவற்றின் கணிசமான அழுத்தம் என்பன, மின்வலுவிற்கான செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடல் பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான அவசியத் தேவைக்குப் புறம்பாக, குறைந்த செலவினைக் கொண்ட மூலங்களினூடாக வலு உருவாக்கத்தை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தேவையினையும் எடுத்துக்காட்டுகின்றன.

3

**இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழு 2018 யூனில் இலங்கை மினசார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 2018 - 2037 காலப்பகுதிக்கான, அடிப்படை விடயத்தில் குறைந்த செலவிலான நீண்டகால உருவாக்க விரிவாக்கத் திட்டத்திற்கு நிபந்தனையுடன் கூடிய ஒப்புதல் ஒன்றை அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்ட 'அரசாங்கத்திற்கு அரசாங்கம்' திரவ இயற்கை வாயு வலுப்பொறிகள் மற்றும் மின்வலு உருவாக்கக் கலப்புத் தொடர்பான அண்மைய அரச கொள்கைகளுக்கு அமைச்சரவையின் ஒப்புதலுக்குட்பட்டு நிபந்தனையுடன்கூடிய ஒப்புதல் ஒன்றை வழங்கியது.** இதற்கமைய, அமைச்சரவையின் ஒப்புதலின் படி, வலு கலப்பு மீதான தேசிய கொள்கை 2030 அளவில் பூர்த்திசெய்யப்படும். இது 30 சதவீத திரவ இயற்கை வாயுவை அல்லது சுதேச ரீதியில் கிடைக்கத்தக்க இயற்கை வாயு, 30 சதவீத உயர் வினைத்திறன் மிக்க நிலக்கரி, 25 சதவீத பாரிய நீர் மின்வலு, நாட்டின் சுத்திகரிப்பிலிருந்தான துணை உற்பத்திகள் மற்றும் மரபுவழியற்ற புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை கொண்ட உலை எண்ணெயிலிருந்தான 15 சதவீதம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. மின்வலு உருவாக்க கலப்பு மீதான அரசாங்கத்தின் கொள்கை சூழல் பாதுகாப்பினையும் சாத்தியமானளவிற்கு உயர்ந்த மட்டத்திலான மரபுவழியற்ற புதுப்பிக்கத்தக்க வலு மூலவளங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேவையினையும் வலியுறுத்துகின்ற வேளையில் நாட்டின் வலுப் பாதுகாப்பினையும் சாத்தியமானளவிற்குக் குறைந்த உருவாக்கச் செலவுடன் கூடிய உருவாக்கக் கலப்பினை பன்முகப்படுத்துவதனையும் உறுதிப்படுத்துகின்றது. மேலும், அரசாங்கம் உயர் வினைத்திறன் கொண்ட இன்றியமையாத சிறப்பு நிலக்கரி வலுத் தொழில்நுட்பங்கள், திரவ இயற்கை வாயு அணு வலு மற்றும் சுதேச ரீதியில் கிடைக்கத்தக்க இயற்கை வாயு போன்ற புதுப்பிக்கப்படமுடியாத வலு மூலவளங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேம்பட்ட தொழில் நுட்பங்களைப் பின்பற்றுவதற்கு அரசாங்கம் முன்மொழிந்து இருக்கிறது. எனினும், உத்தம வலுக்கலப்பு மற்றும் உருவாக்க விரிவாக்கத்திட்டம் என்பன மீதான கொள்கைத் தீர்மானங்களுடன் இணைந்து செல்வது போதுமானதற்றதும் செலவுமிக்கதுமான வலு உருவாக்கத்திலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான மோசமான தாக்கங்களைத் தடுப்பதற்கு அவசியமானதாகும். ஆகவே, இலங்கையின் பொது வசதிகள் ஆணைக்குழு, இலங்கை மின்சாரசபை, வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு மற்றும் கைத்தொழில் நிபுணர்களின் ஒத்துழைப்பு முயற்சிகளின் ஊடாக உத்தம வலுக் கலப்பினை நிர்ணயிப்பதற்கு வேறுபட்ட வலு மூலங்களின் பொருளாதாரச் செலவினை மதிப்பிடுவது இன்றியமையாததாகும். அதேவேளை, வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு களஞ்சியப்படுத்தல் மற்றும் முனைக்கோடி வசதிகள் உட்பட இனிவரும் திரவ இயற்கை வாயுப் பொறிகளுக்காக திரவ இயற்கை வாயுவின் கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இதற்கமைய, அமைச்சு மூலப்பொருட்களை வழங்குவதை ஆயத்தப்படுத்துகின்றமையிலும் ஏறத்தாழ 1,000 மெகாவாட் இயலளைவைக் கொண்ட வலுப்பொறிகளைக் கொள்வனவு செய்வதற்கான விலைக் கோரல் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளிலும் ஈடுபட்டு வருகின்றது. கரையோர அகழ்வு ஆய்வுகள் மன்னார் வடிநிலத்தில் பொருளாதார ரீதியில் ஆற்றல்வாய்ந்த இயற்கை வாயுப் படிவுகள் போதியளவில் காணப்படுவதனை உறுதிப்படுத்தியிருக்கின்ற போதும் இயற்கை வாயு மூலவளங்களைக் கண்டறிவது இன்னமும் ஆரம்ப கட்டத்திலேயே காணப்படுகின்றது. இலங்கை

வரைபடம் 3.4
மின்வலுவிற்கான சராசரி செலவு மற்றும் சராசரி தீர்வை




(அ) உருவாக்கல் இடத்தில் சராசரி செலவு

*மூலம்:* இலங்கை மின்சார சபை

மின்சாரசபை எதிர்வரும் காலத்தில் இப்பொறிகளுக்கான எரிபொருள் தேர்வொன்றாக சுதேச ரீதியில் கிடைக்கத்தக்க இயற்கை வாயுவை அறிமுகப்படுத்துவதற்கான திட்டங்களைக் கொண்டிருக்கிறது.

**இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழு மின்வலு சந்தையை ஒழுங்குபடுத்துவதற்கும் நுகர்வோர் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்குமாக 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.** பொதுமக்களின் ஆலோசனைகளைத் தொடர்ந்து, இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழு, ஏனைய ஆர்வலர் முகவர்களுடன் சேர்ந்து பொதுமக்களின் பாதுகாப்பினையும் அதேபோன்று முறைசார்ந்த அங்கீகரிப்புக்களினூடாக தகைமைவாய்ந்த மின்னியலாளர்களுக்கான அதிகரிக்கின்ற கேள்வியையும் நோக்காகக் கொண்டு மின்னியலாளர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான கட்டமைப்பொன்றினை நிறுவியது. ஆய்விற்குரிய இக்காலப்பகுதியில், வீட்டுக் கூரைகளில் பொருத்தப்படுகின்ற சூரிய வலு முறைமைகளுக்காக வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டன. இது தற்போதைய நியமங்கள் சிறந்த நடைமுறைகள் மற்றும் தற்போதுள்ள அமைப்புக்கள் தொடர்பில் சூரியவலு முறைமைகளை நிறுவுவதற்கான தகல்களை குறித்துரைக்கின்றது. மேலும், இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழு 2018இல் வழங்குநர்களுக்கும் நுகர்வோருக்குமிடையிலான தீர்வை உடன்படிக்கைகளுக்கான வழிகாட்டல்களையும் மின்வலு இணைப்பு மற்றும் வழங்கல்களுக்கான வழிகாட்டல்களையும் அறிமுகப்படுத்தியது. மேலும், இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழு மின்வலு, நீர் மற்றும் பெற்றோலியத் துறைகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய பல்வேறு கொள்கை வழிமுறைகள் மீதான பொதுமக்களினதும் ஆர்வலர்களினதும் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்த்து ஆண்டு முழுவதும் பொதுமக்களுடனான ஆலோசனைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டது.

**வளர்ந்து வரும் வலுவுக்கான கேள்வியை பூர்த்திசெய்யும் நோக்குடனும் அதேவேளை, நாட்டின் மின்வலு உருவாக்கச் செலவைக் குறைப்பதற்குமாக பல பாரியளவு நீர் மின்வலு செயற்றிட்டங்களின் கட்டுமாணப் பணிகள் இவ்வாண்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.** மொரக்கஹந்த நீர் மின்வலு செயற்றிட்டம் 25 மெகாவாட் மொத்த இயலளவுடன் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் செயற்படத் தொடங்கியது. உமா ஓயா நீர் மின்வலு செயற்றிட்டம் மற்றும் மொரகொல்ல நீர் மின்வலு செயற்றிட்டம் என்பனவற்றின் கட்டுமாணப் பணிகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் இவ்வலுப்பொறிகள் 120 மெகாவாட் மற்றும் 30.2 மெகாவாட் நிறுவப்பட்ட இயலளவினை முறையே 2019 இறுதியிலும் 2022 இறுதியிலும் தேசிய மின் தொகுதிக்கு வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், புரோட்லான்ட் நீர் மின்வலு செயற்றிட்டம் 35 மெகாவாட் இயலளவுடன் 2019 இறுதியில் தொழிற்படத்தொடங்குமென எதிர்பார்க்கப்படுகின்ற 'மேலும்' 15 மெகாவாட்டினைக் கொண்ட தல்பிட்டிகல நீர் மின்வலுப் பொறி 2020இல் நிறைசெய்யப்படுவதுடன் 20 மெகாவாட்டைக் கொண்ட சீதாவாக்க நீர் மின்வலுப் பொறி 2019 இறுதியில் தேசிய மின்தொகுதிக்கு வலுவினை வழங்கும்.

**பல மரபுவழியற்ற புதுப்பிக்கத்தக்க வலு உருவாக்க விரிவாக்கச் செயற்றிட்டங்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் செயற்பாட்டிலிருந்தன.** ஒரு மில்லியன் வீட்டலகுகளை சூரிய வலு உருவாக்கப் பொறிகளுக்கு மாற்றுவதற்காக 'சூரிய பல சங்கிரமய' என்பதனை அறிமுகப்படுத்தும் திட்டம் 2018இலும் தொடர்ந்தது. 2018 இறுதியில் 60.7 மெகாவாட் தேசிய மின் தொகுதியுடன் இணைக்கப்பட்டதுடன் மேலும் 70 மெகாவாட் 2019 இறுதியில் தேசிய மின்தொகுதியுடன் இணைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கூரைமீதான சூரிய வலுப் பொறியினை ஊக்குவிப்பதற்காக சலுகைக் கடன் திட்டமான 'ரிவி பலசவி' என்ற திட்டமும் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் இடம்பெற்றது. மேலும், 100 மெகாவாட் கொண்ட எதிர்பார்க்கப்பட்ட இயலளவுடன் கூடிய மன்னார் காற்றாடி வலு செயற்றிட்டத்திற்காக அபிவிருத்தி உரிமங்கள் மற்றும் வலு உரிமங்கள் போன்ற தேவையான ஒப்புதல்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் பெறப்பட்டன.

**2018ஆம் ஆண்டுப்பகுதியில் வலு சிக்கனம் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக மின்வலுத் துறையில் பல்வேறு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** வலுவினை சேமிக்கும் நோக்குடன் இவ்வாண்டுப் பகுதியில் சக்தியென அழைக்கப்படும் எல்ஈடி விளக்குகளை விநியோகிக்கின்ற திட்டம் இலங்கை நீண்டகால உறுதித்தன்மைவாய்ந்த வலு அதிகார சபையினால் இவ்வாண்டுப்பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட்டது. இலங்கை நீடித்து நிலைத்திருக்கும் வலு அதிகார சபை 3.9 மில்லியன் வீட்டலகுகளிடையே 10 மில்லியன் எல்ஈடி விளக்குகளை பகிர்ந்தளிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. இது ஆண்டு அடிப்படையில் உச்ச கேள்வியை 304 மெகாவாட்டினால் குறைத்து 432 கிவாம மணித்தியாலயங்களைச் சேமிக்க உதவுகின்றது. இத்திட்டத்திற்கு எல்ஈடி விளக்குகளை தொகை வடிவில் கொள்வனவு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இது பிரகாசமிக்க ஒளி உமிழ்கின்ற விளக்குகள் மற்றும் வட்டவடிவிலான ஒளி பொருந்திய விளக்குகள் ஆகிய இரண்டிலும் பார்க்க கூடியளவு வினைத்திறன் மிக்கனவாக விளங்குவதுடன் வட்டியின்றி 24 மாத தவணை அடிப்படையில் அறவிடத்தக்க விதத்தில் சந்தை விலைகளிலும் பார்க்க மூன்றில் ஒரு பங்கு குறைவான விலையில் நிரம்பல் செய்யப்படுகின்றது. மேலும், இலங்கை நீடித்து நிலைத்திருக்கும் வலு அதிகாரசபை மொனராகலை

3

மாவட்டத்திலுள்ள சியம்பலாண்டுவ என்ற இடத்தில் சூரியவலுப் பூங்கா ஒன்றை நிறுவுவதற்கும் பூநகரியில் சூரிய - காற்று கலப்புப் பூங்காவொன்றினை நிறுவுவதற்கும் திட்டமிட்டிருக்கின்றது.

## வீதி அபிவிருத்தி

**பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக வீதி வலையமைப்பினை மேம்படுத்தும் பொருட்டு இறுக்கமான இறை நிலைமைகளுக்கு மத்தியிலும் 2018இல் ஏற்கனவே உள்ள வீதிகளைப் புனரமைப்புச் செய்வதும் புதிய வீதிகளை நிர்மாணிப்பதும் தொடர்ந்தும் இடம்பெற்றன.** வீதி அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் மீது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் உறப்பட்ட மொத்தச் செலவினம் 2018இல் ரூ.160.4 பில்லியனாக விளங்கியது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.9 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். இது விரைவுப் பாதை அபிவிருத்தி மீதான ரூ.60.5 பில்லியன் கொண்ட செலவினத்தையும் நெடுஞ்சாலை அபிவிருத்திகள் மீதான ரூ.70.0 பில்லியன் கொண்ட செலவினத்தையும் பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் கட்டுமானம் மீதான ரூ.13.1 பில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. 2018 இறுதியிலுள்ளவாறு, வீதி அபிவிருத்தி அதிகார சபை நெடுஞ்சாலைகள், விரைவுப்பாதைகள் மற்றும் 4,662 பாலங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய 12,389.9 கி.மீற்றர் நீளமான வீதியினைப் பேணியது.

**வீதி வலையமைப்பினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட செயற்றிட்டங்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டன.** மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள 64.3 கி.மீற்றர் நீளமான வீதியினை விரிவாக்கி மேம்படுத்தும் வேலைகளும் 13 பாலங்களின் மீள் நிர்மாணமும் சீனா எக்ஸிம் வங்கியிலிருந்தான ரூ.14.0 பில்லியன் தொகை கொண்ட நிதியியல் உதவியுடன் 2018இல் ஆரம்பிக்கப்பட்டன. அதேவேளை, ஊவா மாகாணத்திலுள்ள 249 கிராமிய வீதிகளை புனரமைத்தல், மேம்படுத்தல் மற்றும் பேணுதல் என்பனவற்றைக்கொண்ட 15 ஒப்பந்தப் பொதிகள் II-வீதி-2 செயற்றிட்டத்தின்கீழ் 2018 யூலையில் வழங்கப்பட்டன. வடபகுதி வீதி இணைப்பு செயற்றிட்டத்தின் கீழ் கண்டி - யாழ்ப்பாணம் வீதியின் இறம்பாவிலிருந்து மதவாச்சி வரையிலான பிரிவின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வேலைகள் 2018 இறுதியில் 99.0 சதவீதமான முன்னேற்றத்தைப் பதிவுசெய்தன. மேலும், முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் 3இன் முதலாவது கட்டத்தின் கீழ் நான்கு நெடுஞ்சாலைகளிலுள்ள 30.1 கி.மீற்றர் நீளமான வீதியின் புனரமைப்புத் தொடர்பான வேலைகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் ஆரம்பித்தன. அதேவேளை, பதுளை-செங்கலடி வீதியின் பிபில செங்கலடிப் பிரிவின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வேலைகள் 2018 யூலை தொடங்கிய வேளையில் பதுளை - பிபில பிரிவின் புனரமைப்பு வேலைகள் இவ்வாண்டுப்பகுதியில் செயற்பாட்டிலிருந்தன. மேலும், கடலோர வீதியை தெகிவளையிலிருந்து பாணந்துறை வரை விரிவாக்குவதற்கான சாத்தியவள ஆய்வுகளும் பேஸ்லைன் வீதியை கிருலப்பனையிலிருந்து கொழும்பு கொரண வீதி வரை விரிவாக்குவதற்கான காணிகளைக் கையேற்கும் நடவடிக்கைகளும் 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இடம்பெற்றன. பேணல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய வீதிகளின் வழமையான மற்றும் அவசர மேம்பாட்டு வேலைகளினை மேற்கொள்வதற்காக 2018ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.4.4 பில்லியன் கொண்ட செலவு அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. மேலும், பெலியகொடவில் களனி ஆற்றிற்குக் குறுக்கே புதிய பாலத்தின் நிர்மாணமும் அளவை, கொம்பனிவீதி மற்றும் முத்தீட்டுக்கல புகைவண்டிப் பாதைகளுக்கு குறுக்கே மேம்பாலங்களை நிர்மாணிப்பதற்கான சாத்தியவள ஆய்வுகளும் 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, 'மஹா நெகும' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 167.3 கி.மீற்றர் நீளமான வீதி 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

**தேசிய விரைவுப் பாதை வலையமைப்பினை அபிவிருத்தி செய்து விரிவாக்குவதுடன் தொடர்பான வேலைகள் 2018இல் தொடர்ந்தன.** மத்தளவை இணைக்கும் விரைவுப்பாதையொன்று உட்பட மாத்தறையிலிருந்து அம்பாந்தோடடை வரையிலான தென்பகுதி விரைவுப்பாதை விரிவாக்கச் செயற்றிட்டத்தின் ஆலோசனைப் பணிகளும் குடியியல்சார் வேலைகளும் 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இடம்பெற்றன. இதற்கமைய, 2018ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறு, நான்கு பிரிவுகளை அதாவது பிரிவு 1 (மாத்தறையிலிருந்து வெலியத்த வரை), பிரிவு 2 (வெலியத்தையிலிருந்து வெற்றியா), பிரிவு 3 (வெற்றியவிலிருந்து அந்தரவேவா) மற்றும் பிரிவு 4 (அந்தரவேவா ஊடாக மத்தளயிலிருந்து அம்பாந்தோட்டை) என்பனவற்றை உள்ளடக்கிய தென்பகுதி விரைவுப்பாதை விரிவாக்கச் செயற்றிட்டத்தின் குடியியல்சார் வேலைகளின் முறையே 86.7 சதவீதம், 61.2 சதவீதம், 88.8 சதவீதம் மற்றும் 86.1 சதவீதம் கொண்ட வேலைகள் நிறைவடைந்துள்ளன. மேலும், மத்திய விரைவுப்பாதையின் முதல் இரண்டு பிரிவுகளினதும் கடவத்தையிலிருந்து தம்புள்ள, மீரிகம அம்பேபுஸ மற்றும் பொத்துகர கலகெதர இணைப்புக்கள் மீதான நிர்மாண வேலைகள் 2018 காலப்பகுதியில் தொடர்ந்தும் இடம்பெற்றன. கொழும்பு - கட்டுநாயக்கா விரைவுப்பாதையை இணைக்கின்ற கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டிய வரையிலான வெளிச்சுற்று நெடுஞ்சாலையின் கட்டம் III இன் நிர்மாண வேலைகள் 2018இல் தொடர்ந்தும் இடம்பெற்றன. விரைவுப்பாதை இணைப்பு மேம்பாட்டுத்

திட்டத்தின்கீழ் கொட்டாவ - பின்கனச் சந்தியின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு தொடர்பான வேலைகளும் கொட்டாவ - தலகல பிரிவின் வீதி விரிவாக்கச் செயற்றிட்டமும் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் செயற்பாட்டிலிருந்தன.

**பல முக்கிய வீதி அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடுத்தர காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.** ககத்தொடுவவிலிருந்து பெல்மதுளை வரை நீடிக்கப்படவிருக்கும் தென்பகுதி விரைவுப்பாதையை இணைக்கின்ற உத்தேச 74 கி.மீற்றர் நீளமான ரூவான் புர விரைவுப்பாதையின் சாத்தியவள ஆய்வுகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் நிறைவடைந்தன. இச்செயற்றிட்டத்திற்கான மொத்த மதிப்பிடப்பட்ட கட்டுமானச் செலவு ரூ.213 பில்லியன்களாக அமைந்ததுடன் காணிக் கையேற்பு நடவடிக்கைகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் இடம்பெற்று வந்தன. இவ்வாண்டுப்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர்ப்புறங்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பல வீதிப் பிரிவுகளிலும் சந்திகளிலும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவும் வீதிப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காகவும் இவ்வாண்டுப்பகுதியில் பல வழிமுறைகளை மேற்கொண்டது. இதன்படி, கொழும்பு பெருநகர் பிராந்தியத்தில் முன்னேற்றங்கண்ட போக்குவரத்து முகாமைத்துவ முறைமையொன்றினை நிறுவுவதற்காக திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் விலைக் கோரலைத் தயாரித்தல் என்பன தொடர்ந்து இடம்பெற்றன. துறைமுகத்தினை அணுகுவதற்கான உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைச் செயற்றிட்டத்தின் விபரமான வடிவமைப்பிற்கான ஆலோசனைப் பணிகள் நிறைவுசெய்யப்பட்ட வேளையில் பேலியகொட - இராஜகிரிய பிரிவிற்கான நிதியியல் மற்றும் கொடுக்கல்வாங்கல் மதியுரைகளுக்கான ஆலோசனைப் பணிகள் செயற்பாட்டிலிருந்தன. மேலும், வீதி அபிவிருத்தி அதிகார சபை இரத்தினபுரி, வரக்காபொல, குருநாகல் மற்றும் கிக்கடுவ ஆகிய இடங்களைக் கடந்துசெல்கின்ற வீதிகளை நிர்மாணிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்மொழிந்திருப்பதுடன் கொச்சிக்கடையிலும் கடந்து செல்லும் வீதியொன்றை நிர்மாணிப்பதற்கு 2019இல் சாத்தியவள ஆய்வொன்றினை நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. பிராந்தியங்களின் இணைப்புக்களை மேம்படுத்துவதற்காக வீதி வலையமைப்பினை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் ஏற்கனவே கணிசமான தொகையை முதலீடு செய்துள்ளபோதிலும் எதிர்பார்க்கப்பட்ட பிராந்திய பொருளாதார விரிவாக்கத்தினை இம்முதலீடுகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிதியிடலில் குறிப்பிடத்தக்க விகிதம் படுகடன் தொடர்பான மூலங்களிலிருந்து கிடைத்தது. இது இம்மூதலீடுகளிலிருந்து உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இப்பிராந்தியத்தில் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம் என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

## வீதிப் பயணிகள் போக்குவரத்து

**2018ஆம் ஆண்டுப்பகுதியில் தனியார் துறையினரால் வழங்கப்பட்ட வீதிப் பயணிகள் போக்குவரத்துப் பணிகள் அதிகரித்த வேளையில் அரச துறையினால் வழங்கப்பட்ட பணிகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.** இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளது மொத்த தொழிற்பட்ட கி.மீற்றர்கள் 446.3 மில்லியன் கி.மீற்றர்களுக்கு 0.4 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்த வேளையில் மொத்த பயணிகள் கி.மீற்றர்களும் 15.5 பில்லியன் கி.மீற்றர்களுக்கு 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துக்களின் மொத்த எண்ணிக்கை 2017இன் 7,305 இலிருந்து 2018இல் 6,955 இற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் தொழிற்பட்ட பேருந்துக்களின் சராசரி எண்ணிக்கையும் 2017இன் 5,266 இலிருந்து 2018இல் 5,227 இற்கு வீழ்ச்சியடைந்தது. இக்குறைப்பிற்கு பேருந்துத் தொகுதிக்கு குறைந்தளவுப் பேருந்துக்கள் சேர்க்கப்பட்டமைக்கிடையில் பேருந்துக்களை திருத்தியமைப்பது பொருளியல் சிக்கனமற்றது என்பதனால் பழைய பேருந்துக்கள் அகற்றப்பட்டமையே காரணமாகும். அதேவேளை, தனியார் துறைக்குச் சொந்தமான பேருந்துக்களின் எண்ணிக்கை 20,030 இற்கு 0.2 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்த வேளையில் தொழிற்பட்ட சராசரி பேருந்துத் தொகுதியும் 2018இல் 19,055 இற்கு 6 சதவீதத்தினால் அதிகரித்தது. தனியார் பேருந்துக்களின் மொத்த தொழிற்பட்ட கி.மீற்றர்கள் 1.1 பில்லியன் கி.மீற்றர்களுக்கு 10.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஆய்விற்குரிய காலப்பகுதியில் பயணிகள் கி.மீற்றர் 55.5 பில்லியன் கி.மீற்றர்களுக்கு 9.1 சதவீதத்தினால் மேம்பட்டது.


**அதேவேளை, உள்நாட்டு எரிபொருள் விலைத் திருத்தங்களினைத் தொடர்ந்து பேருந்துக் கட்டணங்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் பல தடவைகள் திருத்தப்பட்டன.** இதற்கமைய, 2018 மே 22ஆம் நாளன்று அமைச்சரவை பேருந்துக் கட்டணங்களை 12.5 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும் ஆகக்குறைந்த கட்டணத்தை ரூ.10 இலிருந்து ரூ.12 இற்கு உயர்த்துவதற்கும் ஒப்புதலை வழங்கியது. எனினும், உள்நாட்டுச் சந்தையில் டீசல் விலைகளின் தளம்பல்களைப் பரிசீலனையில் கொண்டு உள்நாட்டுச் சந்தையில் பேருந்துக் கட்டணங்கள் 2018 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 4 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட வேளையில் 2018 நவெம்பர் 09 இலிருந்தும் 2018 திசெம்பர் 26 இலிருந்தும் பேருந்துக் கட்டணங்கள் முறையே 2 சதவீதத்தினாலும் 4 சதவீதத்தினாலும் குறைக்கப்பட்டன. அதேவேளை, குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் மாற்றமின்றி ரூ.12 மட்டத்தில் பேணப்பட்டது.

**தொழிற்பாடுகளில் குறைப்பு காணப்பட்ட போதும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நிதியியல் செயலாற்றம் 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மேம்பட்டது.** தற்காலிக கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின்படி, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மொத்த வருமானம் 2018இல் ரூ.44.1 பில்லியனுக்கு 4.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பயணிகள் கட்டணங்களிலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் 7.6 சதவீதத்தினால் அதிகரித்தமையே காரணமாகும். தொழிற்பாட்டுச் செலவினம் 4.6 சதவீதத்தினால் ரூ.41.9 பில்லியனுக்கு அதிகரித்த போதும் தொழிற்பாட்டு நட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.2.2 பில்லியனுக்கு 4.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபை ரூ.1,397 மில்லியன்களைப் பயன்படுத்தி வருடாந்த புனரமைப்புச் செயற்றிட்டத்தின் கீழ், 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் வழமையான பேணல் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இலங்கை போக்குவரத்துச் சபை ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது ஊர்திகளின் புகைவெளியேற்ற பரிசோதனை நிலையங்களை ஆரம்பித்ததுடன் பூர்வாங்க குடியியல் பொறியியல் வேலை 2018ஆம் ஆண்டுப்பகுதியில் முன்னேற்றங்கண்டது. மேலும், 23 இலங்கை போக்குவரத்துச் சபைச் சாலைகள் இவ்வாண்டுப்பகுதியில் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைப் பெற்ற வேளையில் மற்றொரு 30 சாலைகள் உரிமங்களைப் பெற்றுக்கொள்வதற்கான பூர்வாங்க குடியியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. மேலும், இலத்தரனியல் பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிரந்தர கொள்வனவுக் குழு மின்னியல் பேருந்துகளின் கொள்வனவிற்கு அமைச்சரவையிலிருந்து ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபை கட்டுநாயக்கா விரைவுப் பாதையிலும் தென்பகுதி விரைவுப் பாதையிலும் உயர்தர வினைத்திறன் கொண்ட அரச போக்குவரத்துக்களை வசதிப்படுத்துவதற்காக முறையே 38 மற்றும் 78 சொகுசு பேருந்துகளை பணியில் ஈடுபடுத்தியது.

**2018இல் பின்தங்கிய பிரதேசங்களில் பேருந்துப் பணிகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.** அரசாங்கம் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் பாடசாலைப் பிள்ளைகளுக்கு பாதுகாப்பான, செலவுச் சிக்கனமாக மற்றும் நம்பகமான போக்குவரத்து வசதிகளை வழங்குகின்ற 'சிசுசெரிய' பணிகளுக்காக ரூ.552 மில்லியன்களை ஒதுக்கியது. இவ்வாண்டுப்பகுதியில் 1,418 பேருந்துகளுடன் தொழிற்பட்ட 'சிசுசெரிய' பேருந்துத் தொகுதிக்கு 56 புதிய பேருந்துகள் சேர்க்கப்பட்டன. அதேவேளை, பின்னிரவுகளிலும் அதிகாலையிலும் பயணிக்கும் பயணிகளின் பணிக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட 'நிசசெரிய' பணிகளின் கீழ் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 43 புதிய பேருந்துக்கள் சேவைக்கு விடப்பட்டன. கிராமியப் பிரதேசங்களில் வாழுகின்ற மக்களின் போக்குவரத்தினை மேம்படுத்துவதற்கான 'கெமிசெரிய' நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் இடம்பெற்றதுடன் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இத்திட்டத்தின் கீழ் 10 புதிய பணிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருக்கிறது. வீதிப் பயணிகள் போக்குவரத்தின் உற்பத்தித் திறனை உச்சப்படுத்துவதற்கும் முகாமைப்படுத்துவதற்குமான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2018இல் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உத்தேச ஒருமுகப்படுத்தப்பட்ட போக்குவரத்து அட்டைத் தீர்வினை இனை நடைமுறைப்படுத்துவதற்காக 2018 செத்தெம்பரில் அமைச்சரவையின் ஒப்புதலை பெற்றது. இது பயணிகளுக்கு வசதி நிறைந்த போக்குவரத்து கொடுப்பனவு அட்டையொன்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றதுடன் இதனை பல்வேறு போக்குவரத்து முறைகளுக்கும் பயன்படுத்தமுடியும்.

**2018ஆம் ஆண்டுப்பகுதியில் புதிய உந்து ஊர்திகளின் பதிவுகள் முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 8.4 சதவீதம் கொண்ட சுருக்கத்திற்கெதிராக 480,799 இற்கு 6.5 சதவீதத்தினால் அதிகரித்தது.** உந்து ஊர்திகளின் பதிவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு உந்து ஊர்திகளில் பெருமளவிற்குக் காணப்பட்டதுடன் இது 2018இல் 106.2 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. இவ்வதிகரிப்பிற்கு 2018 வரவுசெலவுத் திட்டத்தினூடாக சிறிய எந்திர இயலளவைக் கொண்ட ஊர்திகளுக்கு ஏற்புடைத்தான சாதகமான தீர்வை அமைப்பே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. எனினும், வர்த்தகப் பற்றாக்குறை உயர்வடைவதனைக் கட்டுப்படுத்துவதற்காக 2018ஆம் ஆண்டுப்பகுதியில் தனிப்பட்ட பயன்பாட்டிற்கான உந்து ஊர்திகள் இறக்குமதியைக் குறைப்பதற்காக அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டன. இதன்விளைவாக, புதிய உந்து ஊர்திகளின்

வரைபடம் 3.5
**உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள்**




*மூலம்:* போக்குவரத்து திணைக்களம்

பதிவுகளில் ஏற்பட்ட வளர்ச்சி ஆண்டின் இறுதிப்பகுதியில் வீழ்ச்சியடையும் போக்கினைக் காட்டியது. அதேவேளை, முச்சக்கர வண்டிகள், உந்து ஈருளிகள், பேருந்துகள், பொருள் போக்குவரத்து ஊர்திகள் மற்றும் நில ஊர்திகளின் புதிய பதிவுகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் முறையே 14.8 சதவீத, 1.3 சதவீத, 11.2 சதவீத, 18.0 சதவீத மற்றும் 21.2 சதவீதம் கொண்ட சுருக்கத்தைப் பதிவுசெய்தன. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி உபாயம் வினைத்திறன் மிக்க பொதுப் போக்குவரத்து முறைமையொன்றிற்கான அவசியத்தினை அடையாளம் கண்டிருக்கின்ற போதும் அத்தகைய முறையொன்று போதாமல் இருக்கின்றமை மற்றும் 2018 வரவுசெலவுத் திட்டத்திலிருந்து சிறிய உந்து ஊர்திகளுக்கான வரியமைப்பிற்கு ஏற்பட்ட சாதகமான மாற்றங்கள் என்பன உந்து ஊர்திகளின் இறக்குமதிகளின் அதிகரிப்பிற்கு வழிவகுத்து நாட்டிலிருந்து கணிசமான வெளிநாட்டுச் செலாவணி வெளியேறுவதற்கு காரணமாயிற்று.

## புகைவண்டிப் போக்குவரத்து

**2018இல் இலங்கைப் புகைவண்டிப் பகுதி பயணிகள் போக்குவரத்தில் மிதமான அதிகரிப்பொன்றினை பதிவுசெய்த வேளையில் பொருள் போக்குவரத்து நடவடிக்கைகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.** இவ்வாண்டுப்பகுதியில் புதிய மற்றும் புனரமைப்புச் செய்யப்பட்ட புகைவண்டிப் பெட்டிகளை பணிக்குச் சேர்த்துக்கொண்டமையின் காரணமாக புகைவண்டிப் பயணிகள் கி.மீற்றர்கள் 2017 இல் பதிவுசெய்யப்பட்ட 7.5 பில்லியன் பயணிகள் கி.மீற்றருடன் ஒப்பிடுகையில் 7.7 பில்லியன் பயணிகள் கி.மீற்றர்களுக்கு 2.9 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், 2018இல் பொருள் போக்குவரத்துக் கி.மீற்றர் 2017இன் 144.8 மில்லியன் மெற்றிக்தொன் கி.மீற்றருடன் ஒப்பிடுகையில் 119.8 மில்லியன் மெற்றிக்தொன் கி.மீற்றர்களுக்கு 17.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து தொழில்சங்க நடவடிக்கைகள் புகைவண்டிகள் இரத்துச்செய்யப்படுகின்றமை மற்றும் பொருள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான புகைவண்டிப் பெட்டிகளின் பற்றாக்குறை என்பனவற்றிலிருந்து தோன்றிய வினைத்திறனற்ற தன்மையினை பிரதிபலிக்கின்றது.

**புகைவண்டிப் பகுதி உட்கட்டமைப்பின் நிர்மாணம், மேம்பாடு மற்றும் புனரமைப்பு 2018ஆம் ஆண்டுப்பகுதியிலும் தொடர்ந்தன.** இவ்வாண்டுப்பகுதியில் வடபகுதி புகைவண்டிப் பாதையில் சமிக்ஞை முறைமையுடன்கூடிய விதத்தில் மகோவிலிருந்து ஓமந்தை வரையான புகைவண்டிப் பாதையின் புனரமைப்பு தொடர்பான ஆரம்பவேலைகளும் பொல்காவலையிலிருந்து குருநாகல் வரையான இரட்டைப் புகைவண்டிப் பாதைகளை இடும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், பேராதனையிலிருந்து கடுகண்ணாவை வரையிலான கண்டியின் இரட்டைப் பாதையிடும் வேலைகள் 2018 இலும் தொடர்ந்தன. போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சு மற்றும் இலங்கை புகைவண்டிப் பகுதி என்பனவற்றினால் கூட்டாக மேற்கொள்ளப்பட்ட கொழும்பு நகர்ப்புற புகைவண்டி அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான நிதியியல் உதவியுடன் இவ்வாண்டுப் பகுதியிலும் தொடர்ந்தது. இச்செயற்றிட்டத்தின் கீழ் ஏற்கனவேயுள்ள புகைவண்டிப் பாதையின் மின்னூட்டலுக்காக விபரமான திட்டங்களைத் தயாரித்தல், சமாந்தரமான புகைவண்டிப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் இணைந்த புகைவண்டி நிலையங்களின் புத்தாக்கம் என்பன 2018இல் செயற்படுத்தப்பட்டன. மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரையிலான 115 கி.மீற்றர் நீளமான புகைவண்டிப் பாதையின் நிர்மாண வேலைகள் இவ்வாண்டில் தொடர்ந்தன. அதேவேளை, மாத்தறையிலிருந்து வெலியத்த வரையிலான இச்செயற்றிட்டத்தின் ஆரம்ப கட்ட நிர்மாண வேலைகளில் 92.2 சதவீதம் 2018 இறுதியில் நிறைவடைந்தன. இச்செயற்றிட்டமானது கொழும்பு, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிடையேயான இணைப்புக்களை அதிகரித்தமையின் மூலம் இப்பிராந்தியங்களிலுள்ள பொருளாதார நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும்.

3

**இவ்வாண்டுப்பகுதியில் புகைவண்டிப் பணிகளின் நேரம் தவறாமை மற்றும் நம்பகத்தன்மையினை அதிகரிக்கும்பொருட்டு இலங்கைப் புகைவண்டிப் பகுதி அதன் பௌதீக உட்கட்டமைப்பினை மேம்படுத்தும் நோக்குடன் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது.** இதன்படி, இலங்கை புகைவண்டிப் பகுதி இந்திய தொடர் கொடுகடன்களின்கீழ், புதிய அலகுகளை இறக்குமதி செய்வதனூடாக புகைவண்டிப் பெட்டிகளின் இருப்பினை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. புதிய புகைவண்டிப் பெட்டிகள் மற்றும் டீசல் பல்பிரிவு என்பன கொடுகடன் தொடரின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டதுடன் கொள்வனவுச் செயன்முறைகளை 2019 இலும் தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அரசாங்கத்தின் நிதியியல் உதவியின் கீழ் மலைநாட்டின் புகைவண்டிப் பாதைகளுக்குப் பயன்படுத்துவதற்காக இலங்கைப் புகைவண்டிப் பகுதி டீசல், மின்னியல் எந்திரங்களையும் 9 டீசல் பல் அலகுகளையும் கொள்வனவு செய்வதற்கான கொள்வனவுச் செயன்முறைகளை ஆரம்பித்திருக்கிறது. அதேவேளை, கங்கேரியின் நிதியியல் உதவியின் கீழ் 200 புதிய பாதுகாப்பிடப்பட்ட புகைவண்டிக் கடவை முறைகளை நிறுவுவதற்கான செயற்றிட்டம் 2018இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன்கீழ் 85 முறைமைகள் நிறுவப்பட்ட வேளையில், தற்போதுள்ள 48 புகைவண்டிக் கடவைகள் திருத்தியமைக்கப்பட்டன. அதேவேளை, களுத்துறை தெற்கு - பயாகல தெற்கு புகைவண்டிப் பாதையின் சமிக்ஞைப்படுத்தும் முறைமை மேம்பட்ட வேளையில் சீதுவ-

அட்டவணை 3.4
### போக்குவரத்துத் துறையின் முக்கிய பண்புகள்

| விடயம் | 2017 (அ) | 2018 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) 2017 (அ) | வளர்ச்சி வீதம் (%) 2018 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் (எண்ணிக்கை) | 451,653 | 480,799 | -8.4 | 6.5 |
| பேரூந்துகள் | 3,331 | 2,957 | 24.1 | -11.2 |
| தனியார் ஊர்திகள் | 39,182 | 80,776 | -13.3 | 106.2 |
| முச்சக்கர வண்டிகள் | 23,537 | 20,063 | -58.7 | -14.8 |
| இரட்டை நோக்கங்களுக்கான ஊர்திகள் | 16,742 | 16,931 | -37.7 | 1.1 |
| உந்து ஈருருளிகள் | 344,380 | 339,763 | 1.2 | -1.3 |
| சரக்குக் கொண்டு செல்வதற்கான ஊர்திகள் | 11,432 | 9,371 | 51.2 | -18.0 |
| நில ஊர்திகள் | 13,049 | 10,282 | -6.4 | -21.2 |
| குவாட்சி ஈருளிகள மற்றும் மோட்டார் வாகனங்கள் | - | 656 | - | - |
| 2. இலங்கை போக்குவரத்துச் சபை | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 448 | 446 | -0.8 | -0.4 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 15,810 | 15,541 | -1.8 | -1.7 |
| மொத்த வருவாய் (ரூ.மில்லியன்) | 42,163 | 44,103 | 3.0 | 4.6 |
| தொழிற்பாட்டுச் செலவு (ரூ.மில்லியன்) | 40,081 | 41,935 | -4.6 | 4.6 |
| தொழிற்பாட்டு இலாபம் (+)/நட்டம்(-) (ரூ.மில்லியன்) | 2,081 | 2,168 | -293.4 | 4.2 |
| 3. இலங்கைப் புகைவண்டி | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ('000) | 11,679 | 11,640 | -2.0 | -0.3 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 7,495 | 7,710 | 1.1 | 2.9 |
| சரக்குத் தொன் கிலோமீற்றர்கள் (மில்லியன்) | 145 | 120 | 3.5 | -17.3 |
| மொத்த வருவாய் (ரூ.மில்லியன்) | 6,477 | 7,413 | -2.2 | 14.4 |
| தொழிற்பாட்டுச் செலவு (ரூ.மில்லியன்) | 14,081 | 14,381 | 5.1 | 2.1 |
| தொழிற்பாட்டு இலாபம் (+)/நட்டம்(-) (ரூ.மில்லியன்) | -7,604 | -6,968 | -12.3 | 8.4 |
| 4. சிறிலங்கன் எயார்லைன்ஸ் | | | | |
| பறந்த மணித்தியாலங்கள் | 97,213 | 110,058 | 1.0 | 13.2 |
| பறந்த பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 14,169 | 16,180 | 10.2 | 14.2 |
| பயணிகள் சுமைக்காரணி (%) | 82 | 85 | 2.3 | 3.4 |
| நிறை சுமைக்காரணி (%) | 74 | 75 | 32.3 | 1.9 |
| சரக்கு (மெ.தொ. '000) | 124 | 136 | 9.8 | 9.0 |
| வேலைவாய்ப்பு (எண்ணிக்கை) | 7,044 | 6,846 | 0.9 | -2.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* போக்குவரத்துத் திணைக்களம்
இலங்கைப் புகையிரதச் சேவைகள்
இலங்கை போக்குவரத்துச் சபை
இலங்கை வான்போக்குவரத்து அதிகாரசபை


கட்டுநாயக்க புகைவண்டிப் பாதையின் சமிக்ஞை வழங்கும் முறைமை 2018இல் நிறைவுசெய்யப்பட்டது. மேலும், இலங்கைப் புகைவண்டிப் பகுதி இவ்வாண்டுப்பகுதியில் தற்போதுள்ள புகைவண்டிப் பெட்டிகள் மீதான வழமையான திருத்தல் மற்றும் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டது.

**புகைவண்டிப் பகுதி 2018ஆம் ஆண்டுப்பகுதியிலும் பலவீனமான நிதியியல் செயலாற்றத்தினையே பதிவுசெய்தது.** 2018 ஒத்தோபரில் பயணிகள் கட்டணங்கள் மேல்நோக்கித் திருத்தப்பட்டமையின் முக்கிய காரணமாக இலங்கை புகைவண்டிப் பகுதியின் மொத்த வருமானம் ரூ.7.4 பில்லியனுக்கு 14.4 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், 2019இல் விநியோகிக்கப்படவுள்ள புகைவண்டிப் பெட்டிகளின் கொள்வனவிற்காக செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மூலதனச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2018இல் மொத்தச் செலவினம் ரூ.29.6 பில்லியனுக்கு 9.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் பணிகள் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக இவ்வாண்டில் அவ்வப்போது தடங்கலுக்குட்பட்டிருந்தன. இது பயணிகளுக்கு கஸ்டங்களைத் தோற்றுவித்த வேளையில் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகள் மீது மோசமான தாக்கத்தினையும் கொண்டிருந்தது. எனவே, பொதுமக்களுக்கான தடங்கலற்ற பணிகளை உறுதிப்படுத்துவதற்கும் அதேபோன்று புகைவண்டிப் போக்குவரத்திற்கு முன்னுரிமை அளிக்கின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் அனைத்து ஆர்வலர்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வினை வழங்குவதற்கு முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த விதத்தில் புகைவண்டிப் பகுதி தொடர்பான பிரச்சனைகள் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், காலங்கடந்த தொழில்நுட்பம், போதுமானதற்ற பணிகள், தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் மற்றும் மோசமான நிர்வாகம் என்பனவற்றின் காரணமாக மோசமடைந்த புகைவண்டிப் போக்குவரத்து முறைமையின் ஒட்டுமொத்த வினைத்திறன்னின் அரச அதேபோன்று தனியார் துறை முதலீடுகளினூடாக மேம்படுத்தப்படுவதனை வலியுறுத்தல் வேண்டும்.

## வான்வழிப் போக்குவரத்து

**மிக முக்கியமாக உயர்ந்தளவான பயணிகளின் அசைவுகள் மற்றும் சரக்குக் கையாளல் நடவடிக்கைகளின் ஆதரவினால் 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் வான்வழிப் போக்குரத்துத் துறையானது அதனது நேர்க்கணிய வளர்ச்சி உத்வேத்தை தொடர்ந்தது.** சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகைகளை வெளிப்படுத்தி பயணிகள் அசைவுகள் 10.8 மில்லியனிற்கு 9.9 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்திருந்த அதேவேளை முப்பத்தைந்து பன்னாட்டு வானூர்திகளின் நடவடிக்கையால் ஆதரவளிக்கப்பட்டு சரக்குக் கையாளர் நடவடிக்கையானது 2018இல் 268,496 மெற்றிக்தொன்களும் 0.8 சதவீதம் கொண்ட சிறிதளவான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தினூடான மொத்த வானூர்தி அசைவுகளின் எண்ணிக்கையானது 2018இல் 74,512 இற்கு 9.7 சதவீத அதிகரிப்பைக் காட்டியிருந்தது. மீள்புதுப்பித்தலுக்கான பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையம் மூடப்பட்டமையானது 2017இல் மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் செயற்பாடுகளை அதிகரித்திருப்பினும் 2018 காலப்பகுதியில் மத்தள பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் பயணிகள் அசைவுகள் மற்றும் சரக்குக் கையாளல் ஆகிய இரண்டும் கீழ் மட்டத்திற்கு மீண்டும் சென்றடைந்திருந்தது. வானூர்திகளின் அசைவுகளை பொறுத்தமட்டில் மத்தள பன்னாட்டு வானூர்தி நிலையமானது 2018இல் 709 இற்கு 50.0 சதவீதம் என்ற அதிகளவான வீழ்ச்சியை பதிவுசெய்திருந்தது. மேலும், மத்தள பன்னாட்டு

வரைபடம் 3.6
விமானப் பயணிகள் மற்றும் விமான சரக்கு கையாளல்




*மூலம்:* இலங்கை வான்வழிப்போக்குவரத்து அதிகாரசபை

வானூர்தி நிலையத்தின் மொத்த பயணிகள் அசைவுகள் மற்றும் சரக்குக் கையாளர் என்பவற்றை பொறுத்தமட்டில் முறையே 2,258 மற்றும் 179 மெற்றிக்தொன்களாகக் காணப்பட்ட அதேவேளை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 86 சதவீதம் மற்றும் 63 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை பதிவுசெய்திருந்தது. அதேவேளை, ஒரு உள்நாட்டு வானூர்திகளால் ஆதரவளிக்கப்பட்ட உள்நாட்டு பயணிகளின் அசைவுகளானது முன்னைய ஆண்டின் 24,597 உடன் ஒப்பிடுகையில் 2018இல் 30,725 இற்கு 24.9 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்திருந்தது.

**சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தின் நிதியியல் செயலாற்றம் 2018 இலும் பலவீனமடைந்து காணப்பட்டது.** தற்காலிகமான நிதியியல் கூற்றுக்களுக்கு அமைவாக சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனமானது 2017இன் ரூ.11.9 பில்லியன் தொழிற்பாட்டு நட்புடன் ஒப்பிடுகையில் 2018இல் 18.6 பில்லியன் தொழிற்பாட்டு சட்டத்தை பதிவுசெய்திருந்தது. இது 2018இல் ரூ.191.2 பில்லியனுக்கு 19.6 சதவீதம் அதிகரித்த தொழிற்பாட்டு செலவினதுடன் ஒப்பிடுகையில் ரூ.172.7 பில்லியனுக்கு 16.7 சதவீத அதிகரிப்பினுடைய பெறுபேற்றினால் வெளிப்படுத்தப்பட்டது. எரிபொருள் வினைத்திறனின் முன்னேற்றம், வானூர்தி அட்டவணைகள் மற்றும் வானூர்திகள் என்பவற்றிலான மாற்றம் என்பவற்றினூடாக தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்காக 2018 காலப்பகுதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 2019 சனவரியில் பத்து அங்கத்தவர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டதுடன் அது மீள்கட்டமைப்பு தந்திரோபாயம் தொடர்பில் முக்கிய விடயங்கள் தொடர்பில் பரிந்துரைகளை ஏற்கனவே வழங்கியுள்ளது.

**உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சிவில் போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பான கட்டுமானப் பணிகள் 2018 காலப்பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றன.** பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி செயற்றிட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ் மற்றும் டாக்சி வழிகள் வானூர்தி ஓடு பாதைகள் என்பவற்றுடன் தொடர்புடைய கட்டுமானவேலைகள் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்ததுடன் 2018இன் இறுதியில் இச்செயற்றிட்டத்தின் முன்னேற்றமானது 17 சதவீதமாகக் காணப்பட்டது. பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி செயற்றிட்டத்தின் இரண்டாவது கட்டமானது 2019 நவெம்பர் மாதத்தில் பூரணமாக நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு விமானப் போக்குவரத்து வலையமைப்பை மேம்படுத்தும் நோக்கில் அரசாங்கம் ரத்மலான, ஹிங்குராங்கொட மற்றும் பலாலி போன்ற உள்நாட்டு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான முன்னுரிமையினையும் வழங்கியிருந்தது. அதேவேளை, மட்டக்களப்பு உள்நாட்டு விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து நடவடிக்கைகள் 2018 மாச்சு மாதத்திற்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. 2018இன் இறுதியில், மட்டக்களப்பு உள்நாட்டு விமான நிலையமானது 1,176 விமானங்களை கையாண்டிருந்த அதேவேளை 3,854 பயணிகள் அசைவுகளுக்கும் 47.8 மெற்றிக்தொன் கொண்ட சரக்குக் கையாளல் நடவடிக்கைகளுக்கும் வசதியளித்திருந்தது, மேலும், விமானப் போக்குவரத்தில் காணப்படுகின்ற வியாபார சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்கில் ரத்மலான விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை விமான நிலைய மற்றும் வானூர்தி பணியினால் தயார்செய்யப்பட்ட முதன்மைத் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. அதேவேளை, பண்டாரவளையில் உள்நாட்டு விமான நிலையமொன்றை அமைப்பதற்கான சூழல் தாக்கம் மதிப்பீடானது 2018 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கையில் விமானப் போக்குரத்துக் கைத்தொழிலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் அரசாங்கமானது வினைத்திறனான கொள்கை வழிமுறைகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியிருந்தது. அதற்கிணங்க, 2018 காலப்பகுதியில் நாட்டில் அனைத்து விமானப் போக்குவரத்து கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு வலிமையானதொரு சட்டக் கட்டமைப்பை வழங்குகின்ற விமானப் போக்குவரத்து கொள்கையொன்றை உருவாக்குவதற்கான படிமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது.

## துறைமுகப் பணிகள்

**கொழும்புத் துறைமுகத்தின் அனைத்துக் கொள்கலன் முனைக்கோடிகளினதும் தொழிற்பாடுகள் அதேபோன்று அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் மேம்பட்ட செயலாற்றம் என்பனவற்றின் உதவியுடன் துறைமுகத் துறையின் நடவடிக்கைகள் 2018இல் தொடர்ந்தும் மேம்பட்டன.** இதன்படி, 2018ஆம் ஆண்டுப்பகுதியில் கொழும்புத் துறைமுகம் 7.0 மில்லியன் 20 அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகளைக்

3

அட்டவணை 3.5
**துறைமுகப் பணிகளின் செயலாற்றம்**

| விடயம் | 2017 | 2018 (அ) | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2017 | 2018 (அ) |
| 1. வருகை தந்த கப்பல்கள் (எண்ணிக்கை) | 4,879 | 4,874 | -2.4 | -0.1 |
| கொழும்பு | 4,329 | 4,331 | -1.7 | 0.0 |
| காலி | 87 | 84 | -9.4 | -3.4 |
| திருகோணமலை | 233 | 189 | 7.9 | -18.9 |
| அம்பாந்தோட்டை | 230 | 270 | -18.1 | 17.4 |
| 2. கையாளப்பட்ட மொத்தச்சரக்கு ('000 மெ.தொ) | 93,857 | 104,935 | 8.5 | 11.8 |
| கொழும்பு | 89,035 | 100,152 | 8.7 | 12.5 |
| காலி | 712 | 729 | -7.8 | 2.5 |
| திருகோணமலை | 3,897 | 3,560 | 10.9 | -8.7 |
| அம்பாந்தோட்டை | 213 | 494 | -39.9 | 131.6 |
| 3. மொத்தக் கொள்கலன் போக்குவரத்து ('000 இ.ச.அ) (ஆ) | 6,209 | 7,047 | 8.3 | 13.5 |
| 4. மாற்றி ஏற்றல் கொள்கலன் கையாளல் ('000 இ.ச.அ) (ஆ) | 4,826 | 5,704 | 8.8 | 18.2 |


(அ) தற்காலிகமானது
(ஆ) இ.ச.அ = இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகள்

*மூலம்:* இலங்கைத் துறைமுக அதிகார சபை

கையாண்டது. இது முன்னைய ஆண்டினைவிட 13.5 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். மாற்றிக்கப்பலேற்றல் மற்றும் சரக்குக் கையாளல் நியதிகளில் கொழும்புத் துறைமுகத்தின் செயலாற்றம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 முறையே 18.2 சதவீதம் மற்றும் 12.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பு வீதங்களைப் பதிவுசெய்தது. கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி மற்றும் சவுத்தேசிய கேட்வே டெமினல் என்பனவற்றின் கொள்கலன் கையாளல் 2018இல் முறையே 12.0 சதவீதத்தினாலும் 14.2 சதவீதத்தினாலும் அதிகரித்தன. அதேவேளை, இலங்கை துறைமுக அதிகார சபைக்கு முழுமையாக சொந்தமான ஜெயா கொள்கலன் முனைக்கோடி மற்றும் யுனிட்டி கொள்கலன் முனைக்கோடி என்பனவற்றின் கொள்கலன் கையாளல் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 14.6 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது. இதற்கமைய, கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் சவுத் ஏசியா கேட்வே டெர்மினல் என்பன 2018ஆம் ஆண்டுப்பகுதியில் கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கொள்கலன்களில் முறையே 38.0 சதவீதத்திற்கும் 32.7 சதவீதத்திற்கும் 29.3 சதவீதத்திற்கும் வகைகூறின. அதேவேளை, கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி, துறைமுக அதிகார சபை, சவுத் ஏசியா கேட்வே டெர்மினல் என்பனவற்றில் கையாளப்பட்ட கொள்கலன் மாற்றிக் கப்பலேற்றல் 2018இல் முறையே 15.4 சதவீதத்தினாலும் 21.8 சதவீதத்தினாலும் 17.6 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இலங்கை துறைமுக அதிகார சபையினால் முகாமைப்படுத்தப்படும் ஜெயா கொள்கலன் முனைக்கோடி, யுனிட்டி கொள்கலன் முனைக்கோடி என்பனவற்றின் மொத்த சரக்குக் கையாளல் 12.8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் தனியார் துறையினால் முகாமைப்படுத்தப்படும் சவுத் ஏசியா கேட்வே டெர்மினல் மற்றும் கொழும்பு பன்னாட்டு துறைமுக முனைக்கோடி என்பன 2018இல் முறையே 14.5 சதவீத, 11.5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன. அதேவேளை, கொழும்புத் துறைமுகமானது அல்பா லைனர் குளோபலின் துறைமுகத் தரமிடலின்படி 2018ஆம் ஆண்டுப்பகுதியில் உலகின் முதல் 30 கொள்கலன் துறைமுகங்களிடையே விரைவாக வளர்ச்சியடைந்துவரும் உலகின் மிகச்சிறந்த துறைமுகங்களிலொன்றாக கொழும்புத் துறைமுகம் தரமிடப்பட்டிருக்கிறது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் அபிவிருத்தி மற்றும் தொழிற்பாடுகளுக்காக சைனா மேச்சன்ட் போட் கோல்டிங்ஸ் கம்பனியுடனான சலுகை ரீதியான உடன்படிக்கையின் பின்னர் இத்துறைமுகத்தின் செயலாற்றம் மேம்பட்டது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் சரக்குகளை அகற்றுதல், சரக்குகளை ஏற்றுதல் மற்றும் சரக்குக் கையாளல் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 121.1 சதவீதம், 160.1 சதவீதம் மற்றும் 131.6 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. அதேவேளை, அம்பாந்தோட்டத் துறைமுகத்தில் மொத்த ஊர்திகளின் கையாளல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 115.9 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

**2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் துறைமுக நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காக கொழும்புத் துறைமுகத்திலும் அதேபோன்று காலி, காங்கேசன்துறை, ஒலுவில் மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களின் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.** 2018ஆம் ஆண்டுப்பகுதியில் கொழும்பு தெற்கு துறைமுக செயற்றிட்டத்தின் கீழ் கிழக்கு கொள்கலன் முனைக்கோடியின் அபிவிருத்தி தொடர்ந்தது. இலங்கை துறைமுக அதிகார சபை 440 மீற்றர் நீளமான குடாச் சுவரை ஒட்டியிருக்கின்ற துறைமுகப் பகுதி மற்றும் கிழக்கு கொள்கலன் முனைக்கோடியை இணைக்கின்ற வசதிகள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டன. கொழும்பு மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களை அபிவிருத்தி

வரைபடம் 3.7
**கொள்கலன் கையாளல், மாற்றிக் கப்பலேற்றல் அளவு மற்றும் கப்பல் வருகைகள்**




*மூலம்:* இலங்கைத் துறைமுக அதிகாரசபை

செய்வதற்கான திட்டங்களை உள்ளடக்கியுள்ள தேசிய துறைமுக முதன்மைத் திட்டம் பன்னாட்டு ஆலோசனையாளர்களிடம் இருந்தான தொழில்நுட்ப உதவியுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும், திருகோணமலைத் துறைமுகத்தில் தொகை வடிவிலான சரக்குக் கையாளலுக்கான அதிகரித்த கேள்வியை ஈடுசெய்யும்பொருட்டு தற்போதுள்ள அஷ்ரப் துறைமுக மேடையை 50 மீற்றர்களினால் விரிவாக்குவதற்கும் ஏற்கனவேயுள்ள துறைமுக மேடையுடன் இணைத்து 14 மீற்றர் ஆளத்தில் 110 மீற்றர் நீளமான இன்னொரு குடாச்சுவரொன்றை நிர்மாணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஒலுவில் துறைமுகத்தில் தற்போது காணப்படும் மணல் படிவுப் பிரச்சனைகளுக்கு பொருத்தமான தீர்வுகளை கண்டறிவதற்காக டனிஸ் பன்னாட்டு அபிவிருத்தி முகவர், பொறியியல் ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. காங்கேசந்துறைத் துறைமுகத்தினை புனரமைப்புச் செய்வது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை துறைமுக அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டதுடன் கட்டுமான வேலைகள் 2020 இறுதியளவில் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், காலித் துறைமுகத்தில் உல்லாசப் பயண கரையோர செயற்றிட்டத்திற்கான முன்மொழிவிற்கான கோரிக்கை 2018ஆம் ஆண்டுப்பகுதியில் விடுக்கப்பட்டதுடன் முன்மொழிவுக் கோரிக்கையினை மதிப்பீடுசெய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.


**அதிகரித்துவருகின்ற துறைமுக நடவடிக்கைகளின் உதவியுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதியியல் செயலாற்றம் 2018இல் மேம்பட்டது.** கணக்காய்வு செய்யப்படாத தற்காலிக நிதியியல் கூற்றுக்களின்படி, இலங்கை துறைமுக அதிகார சபை 2017ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.12.0 பில்லியன் கொண்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் வரிக்கு முன்னராக ரூ.8.7 பில்லியன் கொண்ட இலாபத்தினைப் பதிவுசெய்தது. 2018 காலப்பகுதியில், இலங்கை துறைமுக அதிகார சபையின் மொத்த வருமானம் ரூ.50.1 பில்லியனுக்கு 18.5 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேவேளை தொழிற்பாட்டு செலவினம் ரூ.30.0 பில்லியனுக்கு 7.4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும், இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெளிநாட்டு செலாவணி நட்டங்கள் ஆண்டு காலப்பகுதியில் 2017இன் ரூ.2.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.11.3 பில்லியனுக்கு கணிசமாக அதிகரித்திருந்தது.

## தொடர்பூட்டல் பணிகள்

**2018இல் தொலைபேசி மற்றும் இணையத்தள இணைப்புக்கள் என்பவற்றின் உயர்வுடன் தொலைத் தொடர்பூட்டல் துறை மேலும் வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** 2018இல் செல்லிடத் தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை 32.5 மில்லியன் இணைப்புக்களுக்கு 15.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்தன. நிலையாகப் பொருத்தப்பட்ட மொத்த கம்பி வழித் தொலைபேசி இணைப்புக்கள் 1.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் நிலையாகப் பொருத்தப்பட்ட மொத்த கம்பியில்லா இணைப்புக்கள் 9.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. ஒட்டுமொத்தமாக மொத்த இணைக்கப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 2.5 மில்லியன் இணைப்புக்களுக்கு 4.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, அதிகரித்த நிலையான இணையத்தள இணைப்புக்களின் உதவியுடன் மொத்த இணையத்தள இணைப்புக்கள், 2018இல் 23.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் நிலையான இணையத்தள இணைப்புக்கள் 1,530,099 இற்கு 25.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் செல்லிட இணையத்தள இணைப்புக்கள் 5,733,062 இணைப்புக்களுக்கு 22.4 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வபிவிருத்திகளுடன், மொத்த தொலைபேசி நுழைவு (ஒவ்வொரு 100 நபர்களுக்குமான இணைப்பு) நிலையான தொலைபேசி நுழைவு மற்றும் செல்லிட தொலைபேசி நுழைவு என்பனவற்றில் ஏற்பட்ட முறையே 11.5 மற்றும் 150.1 நுழைவின் காரணமாக 161.6இற்கு உயர்வடைந்தது. அதேநேரம், இணையத்தள நுழைவு (ஒவ்வொரு 100 நபர்களுக்குமான இணைப்புக்கள்) 2017 இறுதியில் 27.5 உடன் ஒப்பிடுகையில் 2018 இறுதியில் 33.5 ஆக விளங்கியது.

**இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு 2018ஆம் ஆண்டுப்பகுதியில் தொலைத்தொடர்பூட்டல் கைத்தொழிலின் தரத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் பல வழிமுறைகளை மேற்கொண்டது.** ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு கொழும்பில் அதன் தலைமை அலுவலக

வரைபடம் 3.8
**தொலைபேசி நுழைவு**




*மூலங்கள்:* இலங்கைத் தொலை தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

விரிவாக்கச் செயற்றிட்டத்தினை வடிவமைக்கும் பூர்வாங்க வேலைகளை இறுதிப்படுத்தியதுடன் செயற்றிட்டம் 2019இல் நிறைவுசெய்யப்படவுள்ளது. அதேவேளை, இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைபடுத்தல் ஆணைக்குழுவின் கொழும்பு தாமரைக் கோபுரச் செயற்றிட்டம் 2019 நடுப்பகுதியில் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் கொழும்பு தாமரைக் கோபுரத்தின் அயல் பிரதேசத்தை பொதுமக்களை கவருமொரு இடமாக அபிவிருத்தி செய்வதற்கான முதன்மைத் திட்டமொன்றினையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இதற்கமைய இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அதனுடன் அயலிலுள்ள காணியை பொழுதுபோக்கு வசதிகளுடன்கூடிய பல்தொழிற்பாடுகளைக் கொண்ட ஊர்தித் தரிப்பிடத்தினை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறது. அமைச்சரவை காணி ஒதுக்கிற்கு ஏற்கனவே ஒப்புதலளித்திருப்பதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை காணிக் கையேற்பு மற்றும் மாற்றலுக்கு உறுதியளித்திருக்கிறது.

**அரசாங்கம் டிஜிட்டல் மயப்படுத்தலினூடாக பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அதன் முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டது.** இதற்கமைவாக, டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு மாணவர் மற்றும் ஆசிரியர்களின் டிஜிட்டல் அறிவு செயற்றிட்டங்கள், மூத்த பிரசைகளின் தகவல்தொழில்நுட்ப அறிவு, அரச அலுவலர்களின் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம், மாணவர்களின் அளவையியல் பகுப்பாய்வு அறிவு என்பனவற்றை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களையும் டிஜிட்டல் பற்றிய விழிப்புணர்விற்காக தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை நடாத்துவதிலும் ஈடுபட்டிருந்தது. மேலும், அரசாங்க நிறுவனங்களின் வலையமைப்புப் பாதுகாப்பினை கண்காணிப்புடன் தொடர்புபட்டுள்ள இலங்கை கணனி அவசரகால தயார்நிலைக் குழுவின் இணைப்பு நிலையம் அரச நிறுவனங்களின் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பிற்காக அனைத்தையுமுள்ளடக்கிய பாதுகாப்பு மதிப்பீடுகளை வழங்குவதற்காக சைபர் பாதுகாப்பு இயலளவு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

**தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பவியல் முகவர் நாட்டில் தகவல் தொழில்நுட்ப தொடர்பூட்டல் பணிகளை மேம்படுத்துவதற்காக அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தது.**

அட்டவணை 3.6
தொலைத்தொடர்பூட்டல் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2017 | 2018 (அ) | வளர்ச்சி வீதம் (%)) | |
|---|---|---|---|---|
| | | | 2017 | 2018 (அ) |
| 1. பொருத்தப்பட்ட தொலைபேசி பணிகள் (எண்ணிக்கை) ('000) | 2,603 | 2,485 | 2.1 | -4.6 |
| சேவையிலுள்ள கம்பிவழித் தொலைபேசி இணைப்புக்கள் | 1,198 | 1,216 | 2.8 | 1.5 |
| கம்பியல்லா உள்ளூர் தொலைபேசி இணைப்புக்கள் | 1,405 | 1,269 | 1.5 | -9.7 |
| 2. செலூலர் தொலைபேசிகள் (எண்ணிக்கை) ('000) | 28,199 | 32,528 | 7.5 | 15.4 |
| 3. ஏனைய சேவைகள் | | | | |
| பொதுத் தொலைபேசிக் கூண்டுகள் (எண்ணிக்கை) | 5,137 | 5,091 | -3.1 | -0.9 |
| இணையத்தளத் தொடர்புகள் (எண்ணிக்கை)('000) (ஆ) | 5,904 | 7,263 | 20.0 | 23.0 |
| 4. தொலைபேசி அடர்த்தி (இ) | 143.6 | 161.6 | 5.8 | 12.5 |
| பொருத்தப்பட்ட தொலைபேசிகள் | 12.1 | 11.5 | 0.9 | -5.5 |
| செலூலர் தொலைபேசிகள் | 131.5 | 150.1 | 6.3 | 14.1 |
| 5. இணையத்தள ஊடுருவல் (இ) | 27.5 | 33.5 | 18.6 | 21.7 |

(அ) தற்காலிகமானது
(ஆ) செல்லிட இணையத்தள சேவைகள் உள்ளடங்கலாக
(இ) 100 நபர்களுக்கானது என வரையறுக்கப்பட்டுள்ளது

*மூலங்கள்:* இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2018ஆம் ஆண்டுப்பகுதியில், நாட்டில் தகவல் தொடர்பூட்டல் பணிகளை அணுகக்கூடிய தன்மையை உயர்த்துவதற்காக தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் பல செயற்றிட்டங்களில் ஈடுபட்டிருந்தது. இது தொடர்பில், தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் நடைமுறைப்படுத்திய லங்கா அரச வலையமைப்பு 2.0, மற்றும் 860 அரச நிறுவனங்கள் இவ்வலையமைப்பினூடாக டிஜிட்டல் முறையில் இணைக்கப்பட்டன. அதேவேளை, தொழிற்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதற்காகவும் பணி வழங்கலை மேம்படுத்துவதற்காகவும் லங்கா அரச கிளவுட் 2.0 செயற்றிட்டத்தின் கீழ், 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மேம்பட்ட மையப்படுத்தப்பட்ட லங்கா அரச கிளவுடின் மேம்பட்ட கைத்தொழில் நியம பதிப்பொன்று நிறுவப்பட்டது. ஊழியர் நம்பிக்கை நிதியத்துடன் தொடர்பான பணிகளின் முகாமைத்துவத்தில் வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் அதிகரிக்கும் பொருட்டு தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவர் ஊ.ந.நிதிய முகாமைத்துவ நடைமுறைச் செயற்றிட்டத்தினை நடைமுறைக்கிட்டது. மேலும், தகவல் மற்றும் தொடர்பூட்டல் முகவர் அரசின் முக்கிய அதேநேரப் பணிகளை அபிவிருத்தி செய்வதற்கும், பிரசைகளுக்கு வலுவூட்டுவதற்கும் பொதுமக்களுக்கான வை பையை நிறுவுவதற்கு இணைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் பாராளுமன்றத்திற்கான இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ முறைமையொன்றினை நிறுவுவதற்காக இ - பாராளுமன்ற செயற்றிட்டத்திற்காகவும் இலத்திரனியல் பணிகள் செயற்றிட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது. அறிவினை அதிகரிக்கும் செயற்றிட்டத்திற்கான டிஜிட்டல் நூலங்கள் டிஜிட்டல் சாதனங்களுடன் நூலகங்களை நிறுவுவதற்கு

நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும், தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவர் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் அதன் செயற்றிட்டங்களினூடாக நாட்டின் டிஜிட்டல் மயப்படுத்தல் பற்றிய விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக அரச ஊழியர்களுக்கு பல செயலமர்வுகளையும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்தியது.

**அஞ்சல் திணைக்களம் அஞ்சல் பணியில் வினைத்திறனையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்பவியல் மற்றும் புதிய சந்தை உபாயங்களின் கோட்பாடுகளை அதன் பணிகளில் தொடர்ந்தும் உள்ளீடு செய்துவந்துள்ளது.** 2018 இறுதியில் அஞ்சல் திணைக்களம் 653 பிரதான அஞ்சல் அலுவலகங்களையும் 3,410 துணை அஞ்சல் அலுவலகங்களையும் 524 முகவர் அஞ்சல் அலுவலகங்களையும் 101 கிராமிய முகவர் அஞ்சல் அலுவலர்களையும் 4 பெருந்தோட்ட முகவர் அஞ்சல் அலுவலகங்களையும் உள்ளடக்கியிருந்தது. பிரதான அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் துணை அஞ்சல் அலுவலகங்களின் வலையமைப்பிற்கு ஊடாக அஞ்சல் திணைக்களம் வினைத்திறன் மிக்க அஞ்சல் பணிகளை வழங்குவதற்காக கணனிவழி அதேநேர கொடுக்கல்வாங்கல் பணிகளை அபிவிருத்தி செய்தது. அஞ்சல் திணைக்களத்தின் நிதியியல் செயலாற்றம் முன்னைய ஆண்டுகளைப் போன்றே தொடர்ந்தும் இழப்புக்களைப் பதிவுசெய்தது. எனினும், அஞ்சல் திணைக்களத்தின் தொழிற்பாட்டு இழப்பு 2017இன் ரூ.5.6 பில்லியன் இழப்புடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.5.1 பில்லியனுக்கு 7.4 சதவீதத்தினால் குறைவடைந்தது. அஞ்சல் பணிகள், நிதியியல் பணிகள் மற்றும் சமூக மற்றும் கடப்பாட்டுப் பணிகள் என்பன அஞ்சல் திணைக்களத்தின் வருமானத்தினை 10.2 சதவீதத்தினால் ரூ.7.7 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் 2018இல் தொழிற்பாட்டுச் செலவினம் ரூ.12.9 பில்லியனுக்கு 2.4 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, அஞ்சல் திணைக்களம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் அவர்களது உற்பத்திகளை கணனிவழி அதேநேர முறைமையில் விற்பனை செய்வதற்கும் பன்னாட்டு சந்தைகளை அணுகுவதற்கும் ஊக்குவிப்பதற்காக இ-வர்த்தக அபிவிருத்தி நடவடிக்கைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது. மேலும், அஞ்சல் திணைக்களம் அதன் வருமானத்தினை உயர்த்துவதற்காக, மாற்று போக்குவரத்து முறைகள், விரைவு அஞ்சல் பணிகள், உள்நாட்டு பாசல் பணி அபிவிருத்தி, மெய்நிகர் அஞ்சல் வசதிகளின் அறிமுகம் மற்றும் இ-அட்டை முறை போன்ற துறைகளில் அதன் பணிகளை பன்முகப்படுத்தி விரிவாக்கிக் கொண்டது.

## நீர்வழங்கல் மற்றும் நீர்பாசனம்

**தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை புதிய நீர் இணைப்புக்களுக்காக உயர்வடைந்துவரும் கேள்வியை ஈடுசெய்வதற்காக அதன் பணிகளை தொடர்ந்து விரிவாக்கிக்கொண்ட வேளையில், பாதுகாப்பானதும் தாங்கிக்கொள்ளக்கூடியதுமான குடிநீரினை எல்லோரும் சமமாகப் பெறுவதனை உறுதிப்படுத்தியது.** தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2018இல் 109,482 புதிய நீர்வழங்கல் இணைப்புக்களை வழங்கியது. இதன்படி தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் முகாமைதப்படுத்தப்படும் இணைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 2017 உடன் ஒப்பிடுகையில் மொத்தமாக 2.3 மில்லியன்களை அடைந்து 4.9 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2018இல் வருமானமற்ற நீரின் விகிதாசாரம் கொழும்பு நகரத்தில் 43.1 சதவீதத்திலிருந்து 41.7 சதவீதத்திற்கு குறைவடைந்ததுடன் நாட்டின் விகிதாசாரம் 25.2 சதவீதத்திலிருந்து 24.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வருமானம் ஈட்டாத நீரினால் உருவாக்கப்படுகின்ற இழப்புக்களைக் குறைக்கின்ற வேளையில் பேணல் பணிகளை வலுப்படுத்துவதும் அனைத்தையுமுள்ளடக்கிய வழிமுறைகள், கண்காணிப்பு மற்றும் மீள்ாய்வுச் செயன்முறைகளை நிறுவுவதும் முக்கியமான வழிமுறைகளாகும். நீர்வழங்கல் முறைமைக்குள் இறைக்கப்படுகின்ற நீரின் அளவிற்கும் அதிகாரமளிக்கப்பட்ட நுகர்வாகக் கருதப்பட்டு பட்டியலிடப்படுகின்ற நீரின் அளவிற்குமிடையிலான வேறுபாடாக விளங்கும் வருமானமற்ற நீரின் பயன்பாட்டு மட்டத்தினை குறைக்கும்பொருட்டு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தற்போதுள்ள பழுதடைந்த உட்கட்டமைப்பினைப் புனரமைப்புச் செய்வதற்கும் அதேபோன்று மாணிகளை வாசிப்பதிலுள்ள குறைபாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் சட்டத்திற்கு மாறான இணைப்புக்களைக் குறைப்பதற்குமாக நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

**தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை 2018இல் பல நீர்வழங்கல் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்திய வேளையில் பாதுகாப்பான குடிநீரை பெறக்கூடிய மட்டமும் அதிகரித்திருக்கிறது.** இதன்படி, இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் பாதுகாப்பான குடிநீரை பெறக்கூடிய தன்மை குடித்தொகையில் 90.6 சதவீதத்திற்கு அதிகரித்துடன் குழாய்வழி நீரை பெறுகின்ற வசதி 50.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்வாண்டுப்பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அநுராதபுரம் வடக்கு, கண்டி வடக்கு - பாததும்புற மற்றும் கெம்மாத்தகம ஆகிய இடங்களில் பல முக்கிய நீர்வழங்கல் செயற்றிட்டங்களை ஆரம்பித்தது. இது, அடுத்த இரண்டு தசாப்பதங்களில் 830,000 இற்கும் கூடுதலான நன்மைபெறுநர்களுக்கான நீர்வழங்கல் வசதிகளை மேம்படுத்தும் அதேவேளை,

அட்டவணை 3.7
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல்**

| விடயம் | 2017 | 2018 (அ) | வளர்ச்சி வீதம் (%) 2017 | வளர்ச்சி வீதம் (%) 2018 (அ) |
|---|---|---|---|---|
| மொத்த நீர் வழங்கல் திட்டங்கள் (எண்ணிக்கை) (ஆ) | 343 | 348 | 1.8 | 1.5 |
| காலப்பகுதியில் புதிதாக வழங்கப்பட்ட மொத்த புதிய இணைப்புக்கள் (எண்ணிக்கை) | 126,701 | 109,482 | -8.7 | -13.6 |
| மொத்த இணைப்புக்கள் (எண்ணிக்கை) (ஆ) | 2,219,172 | 2,328,654 | 6.1 | 4.9 |
| மொத்த நீர் உற்பத்தி (மி.க.மீ) (இ) | 679 | 707 | 4.6 | 4.1 |
| வருவாயற்ற நீர் (%) | | | | |
| கொழும்பு பெரும்பாகம் | 43.1 | 41.7 | -5.6 | -3.5 |
| முழுத்தீவும் | 25.2 | 24.9 | -1.2 | -1.2 |
| பாதுகாப்பான குடிநீரின் கிடைக்குந்தன்மை (சதவீதம்) (ஈ) | 89.3 | 90.6 | 1.7 | 1.5 |
| பாதுகாப்பான குழாய் நீரின் கிடைக்குந்தன்மை (சதவீதம்) (உ) | 49.2 | 50.5 | 3.1 | 2.6 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு
(இ) மி.க.மீ = மில்லியன் கன மீற்றர்கள்
(ஈ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தின் குடியிருப்பாளர்களின் வருமானச் செலவின் அளவீட்டின் அடிப்படையிலான ஒப்பீட்டு தரவு 88.8 சதவீதமாகும்.
(உ) ஏனைய அதிகார சபைகளினால் முகாமைத்துவம் செய்யப்படும் முறைமைகள் உள்ளடங்கலாக

*மூலங்கள்:* தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

2018ஆம் ஆண்டுப்பகுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியிடல்களுடன் நாடுமுழுவதும் 29 முக்கிய நீர்வழங்கல் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை எதிர்வரும் காலத்தில் ஏறத்தாழ 1.7 மில்லியன் நன்மைபெறுநர்களை இலக்காகக் கொண்டு நகர்புற மற்றும் கிராமியத் துறைகளை உள்ளடக்கி மேலும் 13 முன்னுரிமை வாய்நத நீர்வழங்கல் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

**2018இல் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிதியியல் நிலைமை தொடர்ந்தும் நலிவடைந்து காணப்பட்டது.** மொத்த வருமானம் ரூ.24.8 பில்லியனுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் உயர்ந்த எண்ணிக்கையான இணைப்புக்கள் வழங்கப்பட்ட வேளையில் தொழிற்பாட்டு மற்றும் பேணல் செலவுகளும் ரூ.27.7 பில்லியனுக்கு 11.4 சதவீதத்தினால் அதிகரித்தன. 2017இல் பதிவுசெய்யப்பட்ட தொழிற்பாட்டு இலாபங்களுடன் ஒப்பிடுகையில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை 2018இல் ரூ.1.8 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு இழப்பினைப் பதிவுசெய்தது. மின்வலுக் கட்டணம், படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் காரணமாக அதிகரித்த செலவினம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிதியியல் நிலைமை பலவீனமடைவதற்கு முக்கியமாகப் பங்களித்தது.

**2018இல் பல முக்கிய நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களின் கட்டுமான வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.** மகாவலி முதன்மைத் திட்டத்தின் முக்கிய கூறொன்றாக விளங்கும் மொரககந்த - களுகங்கை அபிவிருத்திச் செயற்றிட்டம் வடக்கு, வடமத்திய, கிழக்கு, வடமேற்கு மாகாணங்களிலுள்ள வேளாண்மை அபிவிருத்திகளுக்காக சிறுபோகம் மற்றும் பெரும்போகம் இரண்டிலும் 82,000 எக்டேயர்களுக்கும் 5,000 எக்டேயர்கள் கொண்ட புதிய நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதிகளை வழங்குகின்ற நோக்குடன் நிறைவுசெய்யப்பட்டது. அத்துடன் செயற்றிட்டம் 25 மெகாவாட் இயலளவுகொண்ட நீர் மின்வலுவினை தேசிய மின் தொகுதிக்கு வழங்கும். அதேவேளை, களுகங்கை நீர்த்தேங்களிலிருந்து மலைப்பிரதேசங்களூடாக நீரைக் கொண்டுசெல்லும் 9 கி.மீற்றர் நீளமான கால்வாய் மொரகந்த நீர்த்தேக்கத்திலிருந்து 8 கி.மீற்றர் சுரங்கத்தினை இணைக்கின் கட்டுமான வேலைகள் இவ்வாண்டில் ஆரம்பமாகின. தெதுருஓயா நீர்த்தேக்கச் செயற்றிட்டம், மாணிக்கங்கை நீர்த்தேக்கச் செயற்றிட்டம் மற்றும் ரம்புகன்ஓயா நீர்தேக்கச் செயற்றிட்டம் என்பனவற்றை உள்ளடக்கிய பல நீர்த்தேக்கச் செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றன. மேலும், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அதிகார வரம்பின்கீழ் இருந்த உமா ஓயா கீழ்நீரோட்ட அபிவிருத்திச் செயற்றிட்டம் 2018 இறுதியில் 72 சதவீதம் கொண்ட பௌதீக முன்னேற்றங்களைப் பதிவுசெய்தது. அதேவேளை, களனி கங்கை அணைப் பாதுகாப்புச் செயற்றிட்டம் வெள்ள சூழல்நிலைகளிலிருந்து மக்களையும் ஏனைய உட்கட்டமைப்பினையும் பாதுகாக்கும் நோக்குடன் 2018இல் களனி கங்கை அணை பாதுகாப்புச் செயற்றிட்டம் தொடங்கப்பட்டது. மேலும், நாட்டிலுள்ள 21 முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களை உள்ளடக்கிய காலநிலைக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய உட்கட்டமைப்பினை அதிகரிப்பதற்காக காலநிலைக்கே தாக்குபிடிக்கக்கூடிய மேம்பாட்டு செயற்றிட்ட 2018இல் தொடங்கியது.

## 3.3 சமூக உட்கட்டமைப்பு கொள்கைகள், நிறுவன ரீதியான கட்டமைப்பு மற்றும் செயலாற்றம்

### சுகாதாரம்

**2018இல் அரசாங்கம் சுகாதாரப் பணிகளின் வழங்கலைத் தொடர்ந்தும் பலப்படுத்தியது.** இதன்படி, 2018ஆம் ஆண்டுப்பகுதியில் வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவுகளை தரமுயர்த்தியமை கலுபோவில போதனா வைத்தியசாலையில் மிலேனியம் வாட் தொகுதியின் நிர்மாண வேலைகள் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தாதியர் பீடத்தின் நிர்மாணம் என்பனவற்றை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. காரப்பிட்டிய, அம்பாறை மற்றும் யாழ்ப்பாண வைத்தியசாலைகளில் விஷேட சிறுவர் நலக்கவனிப்பு கட்டிடத்தொகுதிகளை நிறுவுகின்ற வேலைகள் இவ்வாண்டுப்பகுதியில் முன்னேற்றங்கண்டன. மேலும், சுகாதாரத் துறையில் இடம்பெற்ற பல்வேறுபட்ட

அட்டவணை 3.8

### சுகாதாரத்துறைப் பணிகளின் முக்கிய பண்புகள்

| விடயம் | 2017 (அ) | 2018 (ஆ) |
|---|---|---|
| **1. அரசாங்கம் (எண்ணிக்கை)** | | |
| மருத்துவமனைகள் (மேற்கத்தேய மருத்துவத்தைக் கையாள்பவை) | 612 | 613 |
| படுக்கைகள் | 76,569 | 76,774 |
| ஆரம்ப நலக்கவனிப்பு பிரிவுகள் | 506 | 506 |
| மருத்துவர்கள் | 20,349 | 20,947 |
| துணை மருத்துவ தொழில் புரிபவர்கள் | 910 | 895 |
| தாதிமார்கள் | 34,221 | 36,165 |
| உடன் கவனிப்பாளர்கள் | 9,218 | வி.கி. |
| **2. ஆயுர்வேதம் (எண்ணிக்கை)** | | |
| மருத்துவமனைகள் | 104 | 109 |
| படுக்கைகள் | 5,169 | 4,365 |
| தகுதிபெற்ற ஆயுர்வேத மருத்துவர்கள் | 1,381 | 1,896 |
| பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்கள் (இ) | 23,206 | 25,431 |
| **3. நலத்துறை மீதான மொத்த அரச செலவினம் (ரூ.பில்லியன்)** | 196.8 | 218.5 |
| நடைமுறைச் செலவு | 161.3 | 180.6 |
| மூலதனச் செலவு | 35.5 | 37.9 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ஆயுர்வேத ஆணையாளர் திணைக்களத்துடன் பதிவு செய்யப்பட்டது

*மூலங்கள்:* சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
ஆயுர்வேதத் திணைக்களம் நிதி அமைச்சு

முன்னெடுப்புக்களின் பெறுபேறாக 2018இல் ருபெல்லா மற்றும் பிறந்த குழந்தைகளுக்கான ருபெல்லாவிற்கான அறிகுறிகளை என்பனவற்றை போதுமானளவிற்கு இலங்கை கட்டுப்படுத்தியிருக்கிறது என்பதனை உலக சுகாதார அமைப்பு அங்கீகரித்திருக்கிறது. சுகாதாரத் துறையின் தற்காலிகத் தரவுகளின்படி, 613 வைத்தியசாலைகள் நாட்டின் ஒவ்வொரு 1,000 பேருக்கும் 3.5 படுகைகளுடன் காணப்படுகின்றது. மேலும் 2018 இறுதியில், ஒவ்வொரு 1,035 ஆட்களுக்கும் ஒரு தகைமைபெற்ற மருத்துவரும் ஒவ்வொரு 599 ஆட்களுக்கும் ஒரு தாதியும் அரச வைத்தியசாலைகளில் காணப்படுகின்றனர்.

**மேலும் இவ்வாண்டுப்பகுதியில் வைரஸ் காய்ச்சல், டெங்கு மற்றும் காசநோய் போன்ற தொற்றக்கூடிய நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.** குறிப்பிட்ட பருவகாலங்களில் வைரஸ் காய்ச்சல் அதிகளவில் பரவுவது 2018இல் சுகாதாரத் துறைக்கு பெரும் சவால்களைத் தோற்றுவித்தது. இதன்படி, வைரஸ் காய்ச்சலை ஒத்த அறிகுறிகளுடன்கூடியவர்களென 108,158 ஆட்கள் பதிவுசெய்யப்பட்ட வேளையில் இவ்வாண்டு காலப்பகுதியில் 41 மரணங்கள் இவ்வைரஸ் காய்ச்சலின் மூலம் ஏற்பட்டதாக பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. வைரஸ் காய்ச்சலினை போன்ற அறிகுறிகளைக் கொண்ட அதிகரித்த எண்ணிக்கையானவர்கள் 2018 மே மற்றும் யூன் மாதங்களில் தென் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தார்கள். சிறுவர்கள், வயது முதிர்ந்தோர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நீண்டகால நோய்கள் மற்றும் குறைந்த எதிர்ப்புச் சக்திகளைக் கொண்ட நோயாளர்கள் இந்த வைரஸ் காய்ச்சல் தொற்றிற்கு பெருமளவில் உள்ளாகினர். எனவே, இந்த வைரஸ் காய்ச்சல் கடுமையாகப் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக 2018 மேயில் ஆறு கல்வி மாவட்டங்களிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளும் தென் மாகாணத்திலுள்ள முன்பள்ளிகளும் தற்காலிகமாக மூடப்பட்டன. இந்நிலைமையானது சுகாதாரக் கல்விப் பிரச்சாரங்கள், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட தொற்றுநோய் தடுப்பு மருந்துகள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்புச் சாதனங்களின் வழங்கல் மற்றும் வைரஸ் காய்ச்சல் பரவுவதைத் தணிப்பது தொடர்பான அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற தடுப்பு வழிமுறைகளின் விளைவாக 2018 யூன் இறுதியில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. அதேவேளை டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 186,101 உடன் ஒப்பிடுகையில் 2018இல் 51,591 இற்கு 72.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையுடன் டெங்கின் பரம்பல் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. டெங்கினைப் பொறுத்தவரையில் உயர்ந்த எண்ணிக்கை பாரிய பருவகால மழைவீழ்ச்சியினைத் தொடர்ந்து 2018 யூன், யூலை, நவெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் ஏற்படுவதாக அறிக்கையிடப்பட்டிருக்கிறது. டெங்கு மரண வீதமும் தொற்றுநோய்ப் பரம்பல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வழிமுறைகள், அதிகரித்த கண்காணிப்பு மற்றும் நோய் தொடர்பான முகாமைத்துவம் என்பனவற்றின் உதவியுடன் 2017இன் 0.24 சதவீதத்திலிருந்து 2018இல் 0.11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதன்படி, உள்ளூரில் நோய் கட்டுமீறிப்பரவும் சூழ்நிலையில் விரைவாகப் பணிக்கமர்த்துவதற்காக மேலதிகச் சாதனங்கள் மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட அவசரகாலக் குழுவுடன் கூடிய சிறப்புப்பிரிகளை பல்வேறு வைத்தியசாலைகளிலும் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், கிரமமான சுத்திகரிப்புப் பிரச்சாரங்கள், பரிசோதனைகள் மற்றும் நுளம்பு இனப்பெருக்கப் பிரதேசங்களில் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக தனியார் மற்றும் அரச பணிமனைகளுக்கெதிராக வழக்குத்தொடுத்தல் என்பனவூடாக நுளம்பினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்ட வேளையில் கிரமமான விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், கட்டம் கட்டமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 1,287 நுளம்பு தடுப்புக் கள உதவியாளர்கள் உயர் இடர்நேர்வினைக் கொண்ட பிரதேசங்களில் நுளம்பு இனப்பெருக்கம் செய்கின்ற இடங்களை அடையாளம் காண்பதற்கும் அதனை, இல்லாதொழிப்பதற்கும் பணிக்கமர்த்தப்பட்டனர். அதேவேளை 2018இல் காசநோய் பரவும் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 3,626 உடன் ஒப்பிடுகையில் 5,249 இற்கு 44.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. காசநோய் தொடர்பான தேசிய நிகழ்ச்சித்திட்டமானது காசநோய் ஏற்படுவதனையும் அதிலிருந்தான மரண வீதத்தினையும் குறைப்பது அதேபோன்று அது தோற்றம்பெறுவதனைத் தடுப்பது ஆகிய இரண்டின் மீதும் கவனத்தைச் செலுத்தியது.

3


இந்நாட்டில் தொற்றுநோய்கள் கிரமமாக பெருமளவில் பரவுகின்ற தன்மைகளானது, காவிகளைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்வது, பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், தேவையான மருந்து வகைகளையும் நோய்த்தடுப்பு மருந்துகளையும் போதுமானளவிற்கு இருப்பில் வைத்திருப்பது போன்ற நோய்த்தடுப்பு ஆயத்த நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது. நீண்டகாலத்தில் கிரமமான முறையில் ஏற்பட்டுவரும் இத்தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்தும்பொருட்டு மருத்துவ மற்றும் துணை மருத்துவக் கல்வியில் அரச மற்றும் தனியார் துறை முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் நலத்துறையில் பணியாளர் பதவிகளை அதிகரிப்பது மிகஇன்றியமையாததாகும்.

**இவ்வாண்டுப்பகுதியில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு தீவிரமான மற்றும் நாட்பட்ட தொற்றாநோய்களைத் தடுப்பதனையும் கட்டுப்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு அதன் முயற்சிகளைத் தொடர்ந்தது.** தொற்றாநோய்கள் நாட்டில் இடம்பெற்றுவருகின்ற குடித்தொகையியல், சமூகப் பொருளாதார மற்றும் வாழ்க்கைமுறை மாற்றங்களின் காரணமாக சுகாதாரத் துறைக்கு ஒரு மிகப்பெரும் சவாலாக மாறிவருகின்றது. இதற்கமைய, தொற்றாநோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு வசதிகளை வலுப்படுத்தியிருக்கின்ற அதேவேளை விழிப்புணர்வு கூட்டங்களையும் நடாத்திவருகின்றது. உடற்பருமனைக் குறைப்பதற்கு சரியான வழி என்ற தொனிப்பொருளுடன் பொது மக்களிடையே விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக கொழும்பில் தேசிய ஊட்டச்சத்து மாதமொன்று நடாத்தப்பட்டது. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில் அரசாங்கம் குறிப்பிட்ட மருந்துகளினதும் மருத்துவ உபகரணங்களினதும் விலைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் சுகாதார அமைச்சு நாட்டின் ஊட்டச்சத்து மட்டங்களை உயர்த்துவதற்கும் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின ஊடாக முன்பள்ளிகளில் ஊட்டச்சத்து மட்டங்களை வலுப்படுத்துவதற்குமாக மாவட்ட ஊட்டச்சத்து நடவடிக்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது உட்பட ஊட்டச்சத்தின்மைப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டது. மேலும், சுகாதார அமைச்சு உணவுப் பாதுகாப்பினையும் ஊட்டச்சத்து பிரச்சனைகளுடன்கூடிய பிள்ளைகளின் தனிப்பட்ட ஊட்டச்சத்து நிலையினைக் கவனிப்பதற்குமாக ஊட்டச்சத்து கண்காணிப்பினைப் வலுப்படுத்தியதுடன் கடுமையான ஊட்டசத்தின்மை கொண்ட பிள்ளைகளைகளுக்கான 'திரிபோஷா' இலும் பார்க்க உயர்ந்த சக்தியைக்கொண்ட புதிய துணைநிரப்பு உணவுகளின் முன்னோடிப் பரீட்சிப்புக்களை நடாத்தியதுடன் ஊட்டச்சத்தின்மைப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஊட்டச்சத்து வழிகாட்டல் குழுவொன்றினையும் நிறுவியது.


**நாட்பட்ட சிறுநீரக நோயின் காரணம் அறியப்படாத தன்மை முக்கிய சுகாதாரப் பிரச்சனையாக இலங்கையின் கிராமியப் பிரதேசங்களில் தொடர்ந்தும் காணப்படுகின்றது.** நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை 2017இன் 27,530 இலிருந்து 2018 இறுதியில் 28,114 இற்கு அதிகரித்த வேளையில் நோய் காணப்படும் மட்டம், அதாவது, மொத்த குடித்தொகையின் சதவீதமாக நாட்பட்ட சிறுநீரக நோய் அறியப்படாத நோய்க்கூற்றியல் விடயங்களின் எண்ணிக்கை 2018இல் 0.88 சதவீதத்தினை அடைந்தது. நாட்பட்ட சீறுநீரக நோய் / நாட்பட்ட காரணம் அறியப்படாத சிறுநீரக நோய் கூற்றியல்களை நேரகாலத்துடன் அடையாளம் காணுவதை வசதிப்படுத்துவதற்காக உயர் இடர்நேர்வினைக் கொண்ட பிரதேசங்களில் வதிக்கின்ற 20 வயதுக்குமேற்பட்ட தனிப்பட்டவர்கள் தொடர்பான கணனி மூலமான நுண்ணாய்வு இவ்வாண்டிலும் தொடர்ந்தது. அதேவேளை, இவ்வாண்டுக்காலப்பகுதியில் உயர் இடர்நேர்வுகளைக் கொண்ட பிரதேசங்களில் 13 புதிய சிறுநீரக சிகிச்சை நிலையங்களின் கட்டுமானம் நிறைவடைந்திருப்பதுடன் மேலும் 5 சிறுநீரகப் பிரிவுகளின் கட்டுமானம் பதுளை, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும், 16 சிறுநீரக இரத்தச் சுத்திகரிப்புப் பிரிவுகள் நாட்பட்ட சிறுநீரக நோயின் காரணம் அறியப்படாத பிரதேசங்களில் நிறைவடைந்த வேளையில் மேலும் இரண்டு சிறுநீரக நோய் இரத்தச் சுத்திகரிப்புப் பிரிவுகளின் கட்டுமான வேலைகள் ஹோமாகம மற்றும் புத்தளம் ஆதார வைத்தியசாலைகளில் நடைபெற்றுவருகின்றன. மேலும், 2018இல் நாட்பட்ட சிறுநீரக நோய் காரணமறியப்படாத நோய்க்கூற்றியல் தொடர்பான ஆராய்ச்சிக் கற்கைகள் இடம்பெற்றுவருவதுடன் 5,000 நோயாளர்களை மாதிரியாகக் கொண்ட அடிப்படை மதிப்பீடுகள் நிறைவுசெய்யப்பட்டன.

**2018இல் சுகாதாரக் கவனிப்புப் பணிகளை வழங்குவதில் தனியார் துறை தொடர்ந்தும் முக்கியமான வகிபாகமொன்றை ஆற்றியது.** 2018 இறுதியில் 454 படுக்கைகளுடன்கூடிய 23 தனியார் ஆயுர்வேத வைத்தியசாலைகள் உட்பட 5,120 படுக்கைகளுடன் 200 பதிவுசெய்யப்பட்ட தனியார் வைத்தியசாலைகள் காணப்படுகின்றன. அதிகரித்துவரும் வருமான மட்டங்கள், அதிகரித்துவருகின்ற பரவும் நோய்கள் மற்றும் வயதுமுதிர்ந்துவரும் குடித்தொகை என்பனவற்றின் காரணமாக தனியார் சுகாதாரப்பணிகளுக்கான கேள்வி தொடர்பான காலப்பகுதியில் விரைந்து உயர்வடைந்து வருகின்றது. இப்பின்னணியில், தனியார்துறை பணி வழங்கலின் வளர்ச்சிக்கு வசதியளிக்கின்ற வேளையில் பணி வழங்கலில்

வரைபடம் 3.9 கல்வி மற்றும் சுகாதாரம் நிழற்படம் - 2018



வரைபடம் 3.10
சுகாதாரம் மற்றும் கல்வி மீதான அரச செலவினம்




*மூலங்கள்:* நிதி அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

3

காணப்படும் தர நியமங்கள் சுகாதார போட்டித்தன்மை மிக்க விலையிடல், தனியார் சுகாதாரக் கவனிப்பு வழங்குநர்களினால் நோயாளர்கள் சுரண்டப்படுவதைத் தடுத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கு தனியார் சுகாதாரக் கவனிப்புத் துறையினை ஒழுங்குமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும். இதன்படி, சுகாதார அமைச்சு பரீட்சிப்பு, அவதானிப்பு விஜயங்கள், தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பான சரியான தகவல் முறைமைகளை நிறுவுதல், தனியார் மருத்துவ நிறுவனங்களின் உரிமங்களை பதிவுசெய்தல் மற்றும் புதுப்பித்தல் முன்மொழியப்பட்ட செயற்றிட்டங்களை மதிப்பீடு செய்ததன் பின்னர் புதிய தனியார் மருத்துவ நிறுவனங்களை நிறுவுவதற்கு பூர்வாங்க ஒப்புதல்களை வழங்குதல் அதேபோன்று தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கெதிரான முறைப்பாடுகளை கையாளும் நடைமுறைகளை விசாரித்தல் மற்றும் சரியான நேரத்தில் நிவாரண நடவடிக்கைகளை நடைமுறைக்கிடுதல் என்பனவற்றில் மிகத் தீவிரமாக ஈடுபட்டது. தனியார் சுகாதாரக் கவனிப்புத் துறையின் வளர்ச்சிக்கான மிகமுக்கியமான தடைகளில் ஒன்று தாங்கக்கூடிய தன்மையை குறைவாகக் கொண்டுள்ள பொதுமக்களுக்கு பணிகளை வழங்குகின்ற சுகாதாரக் காப்புறுதி நுழைவுத் தன்மை போதுமானதாக இல்லாமையே ஆகும். இது தொடர்பில் குடும்ப அலகுகளின் மீதான குறிப்பாக, விரைந்து வயது முதிர்ந்துவரும் குடித்தொகையினரின் பின்னணியில் தனியார் சுகாதாரக் கவனிப்புச் செலவுகளின் சுமையினைக் குறைக்கும் பொருட்டு குறிப்பாக மேல் நடுத்தர வருமானக் குழுவினரிடையே நலக்காப்புறுதியினைப் பிரபல்யப்படுத்துவது முக்கியமானதாகும்.

## கல்வி

**கல்வியின் மட்டத்தை மேம்படுத்தும் நோக்குடன் கொள்கை முன்னெடுப்புக்கள் மற்றும் கல்விச் சீர்திருத்தங்கள் 2018ஆம் பகுதியிலும் தொடர்ந்தன.** இதன்படி, கல்வியமைச்சு தொடர்பான ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சிநிரலுடன் இசைந்துசெல்லும் விதத்தில் 2018 - 2025 காலப்பகுதிக்கான நடுத்தரகால உபாயத் திட்டமொன்றினை அபிவிருத்தி செய்தது. சமமான கல்வி மற்றும் பொதுக்கல்வியின் தரத்தை மேம்படுத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்துவது உட்பட, நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்ட துறைகளை இத்திட்டம் கொண்டிருந்தது. கல்வி அமைச்சு தேசிய கல்வி நிறுவகம், தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சுடன் சேர்ந்து 2018இல் ‘13 வயதினருக்கான உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி’ நிகழ்ச்சித்திட்டத்தினை ஊக்குவிக்கும் நோக்குடன் நடவடிக்கைகளை நடைமுறைக்கிட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாணவர்கள் பொதுவானதும் பிரயோகிக்கத்தக்கதுமான கூறுகளை உள்ளடக்கிய தொழில் பாடப் பிரிவுகளை கற்பதற்கான வாய்ப்புக்களை கொண்டிருக்கிறார்கள். 2017இல் தொடங்கப்பட்ட முன்னோடிச் செயற்றிட்டம் மொத்தமாக 195 பாடசாலைகளில் 2018இல் நடைமுறைக்கிடப்பட்டன. இம்முன்னோடிச் செயற்றிட்டங்கள் செயலமர்வுகளையும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துதல், பௌதீக மூலவளங்களை வழங்குதல், மாணவர் அனுமதி மற்றும் ஆசிரியர் பயிற்சி அதேபோன்று ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. அதேவேளை, கல்வி அமைச்சு தொழில்பயிற்சிப் பிரிவின்கீழ் இரண்டாம் ஆண்டு கல்விகற்கின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சின் ஒத்துழைப்புடன் தேசிய தொழில்பயிற்சி தகைமை மட்டம் 4 இற்குச் சமமான சான்றிதழை வழங்குவதற்காக மாணவர்களுக்கு பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளையில் தனியார் துறை உட்பட ஏனைய தொடர்பான நிறுவனங்களுடன் ஆரம்ப கலந்துரையாடல்களுடன் ஈடுபட்டுபட்டு வருகின்றது. தேசிய கல்வி நிறுவகம் ‘13 வயதினருக்கான உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி’ நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் தொழிற்பாடங்களுக்காக 26 பாடத்தொகுப்புக்களின் அபிவிருத்திகளை உள்ளடக்கிய பாடவிதான அபிவிருத்திகளை நோக்கமாகக் கொண்டு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.

**ஆட்களை அதிகரித்தமை மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பனவற்றினூடாக பொதுக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னேற்றங்கண்டன.** 2018ஆம் ஆண்டுப்பகுதியில் கல்வி பதவிநிலைகளுக்கு ஆதரவளிப்பதற்காக மொத்தமாக 2,186 ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இது தேசிய பாடசாலைகளுக்கான 867 ஆசிரியர்களையும் மாகாண பாடசாலைகளுக்கான 1,319 ஆசிரியர்களையும் உள்ளடக்கியிருந்தது. மேலும், அரச பாடசாலைகளிலுள்ள பொதுக்கல்வியின் தர நியமங்களைப் பேணுவதற்காக, இவ்வாண்டுப்பகுதியில் ஏறத்தாழ 24,260 ஆசிரியர்களும் 8,150 பாடசாலைகளும், கல்வி அமைச்சு, கல்வி மாகாணத்

அட்டவணை 3.9

**பொதுக் கல்வியின் முக்கிய பண்புகள்**

| விடயம் | 2017 (அ) | 2018 (ஆ) |
|---|---|---|
| 1. பாடசாலைகள் (எண்ணிக்கை) | 11,053 | 11,039 |
| அரச பாடசாலைகள் | 10,194 | 10,174 |
| முதலாந்தர | 4,059 | 4,032 |
| இரண்டாந்தர | 6,135 | 6,142 |
| இதில் தேசிய பாடசாலைகள் | 353 | 353 |
| ஏனைய பாடசாலைகள் | 859 | 865 |
| பிரிவேனாக்கள் | 753 | 759 |
| தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ) | 106 | 106 |
| 2. மாணவர்கள் (எண்ணிக்கை) | 4,446,401 | 4,412,695 |
| அரச பாடசாலைகள் | 4,165,964 | 4,213,729 |
| ஏனைய பாடசாலைகள் | 199,334 | 198,966 |
| பிரிவேனாக்கள் | 62,872 | 60,440 |
| தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ) | 136,462 | 138,526 |
| சர்வதேச பாடசாலைகள் | 81,103 | வி.கி. |
| 3. ஆசிரியர்கள் (எண்ணிக்கை) | 263,934 | 260,434 |
| அரச பாடசாலைகள் | 241,591 | 247,174 |
| ஏனைய பாடசாலைகள் | 12,969 | 13,260 |
| பிரிவேனாக்கள் | 6,414 | 6,477 |
| தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ) | 6,555 | 6,783 |
| சர்வதேச பாடசாலைகள் | 9,374 | வி.கி. |
| 4. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் (எண்ணிக்கை) (ஈ) | 322,135 | 327,764 |
| 5. மாணவர்கள்/ ஆசிரியர்கள் விகிதம் | | |
| அரச பாடசாலைகள் | 17 | 17 |
| ஏனைய பாடசாலைகள் | 15 | 15 |
| சர்வதேச பாடசாலைகள் | 9 | வி.கி. |
| 6. முதலாந்தர தேறிய அனுமதி விகிதம் (தரம் 1 - 5) | 93.90 | 91.83 |
| 7. இரண்டாந்தர தேறிய அனுமதி விகிதம் (தரம் 6 - 11) | 95.80 | 93.48 |
| 8. வயது குறித்துரைக்கப்பட்ட அனுமதி விகிதம் (தரம் 1 - 9) | 96.28 | 92.75 |
| 9. ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் (எண்ணிக்கை) | 8 | 8 |
| 10. ஆண்டுக்காலப்பகுதியில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (எண்ணிக்கை) | 2,553 | 2,027 |
| 11. தேசிய கல்வியியற் கல்லூரிகள் (எண்ணிக்கை) | 19 | 19 |
| பயிற்சி ஆசிரியர்கள் (எண்ணிக்கை) | 8,014 | 9,746 |
| ஆண்டுக்காலப்பகுதியில் சித்தியடைந்தோர்கள் எண்ணிக்கை | 2,602 | 1,650 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் மற்றும் விசேட தேவைகளுடனான சிறுவர் பாடசாலைகள் (இந்த எண்ணிக்கை கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சர்வதேச பாடசாலைகள் நீங்கலானது)
(ஈ) அரச பாடசாலைகள் மட்டும்

*மூலம்:* கல்வி அமைச்சு

திணைக்களங்கள், வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் பிரதேச கல்வி அலுவலகங்கள் என்பனவற்றினால் வெளிவாரியாக மதிப்பீடு செய்யப்பட்டன. கல்வியாளர்கள் மற்றும் நிர்வாகத்தர்கள் ஆகிய இருவரினதும் தகைமையை அபிவிருத்தி செய்வதற்காக மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட சிறப்புக் கல்வி ஆசிரியர்களுக்கு ஓடிசம், பிறையில் முறை மற்றும் கணனிக் கல்வி என்பனவற்றில் பயிற்சி அளிக்கப்பட்ட வேளையில் 140 ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு கற்றலில் இடர்பாடுகளைக்கொண்ட மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதில் தேர்ச்சி பெறுவதற்கு பயிற்சி வழங்கப்பட்டது. அதேவேளை, விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகியவற்றின் கல்விக்காக தேசிய கொள்கை தொடர்பில் மேலோட்டமான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. வகை 2 இணைக் கொண்ட பாடசாலைகளில் 3,000 அதிபர்களுக்கு விஞ்ஞானக் கல்வியின் தரத்திற்கு உதவுவதற்காக பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட நடமாடும் ஆய்வுகூடத் தொகுதியைக் கையாளுவதில் பயிற்சி வழங்கப்பட்டது. 'அருகிலுள்ள பாடசாலை மிகச்சிறந்த பாடசாலை' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான முன்னெடுப்புக்களை உள்ளடக்கிய பொதுக்கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் பௌதீக உட்கட்டமைப்பினை அரசாங்கம் தொடர்ந்தும் மேம்படுத்தியது. இம்மாதிரித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பணி, தொழில்நுட்பவியல் ஆய்வுகூடங்களின் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பப்பீடங்களின் அபிவிருத்தியை உள்ளடக்கியிருந்தது. மேலும், 6,000 பாடசாலைக் கட்டடங்களைத் திருத்துதல் மற்றும் 5,600 புதிய வகுப்பறைகளை நிர்மாணித்தல் என்பன இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தது. அதேவேளை, கல்வி அமைச்சு கொழும்பிலுள்ள தேசிய நூலகத்தின் புதுப்பித்தலுக்காக ரூ.250 மில்லியனை ஒதுக்கீடு செய்தது.

**இவ்வாண்டுப்பகுதியில் கணனி வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பக் கல்வியை விரிவுபடுத்துவதனை நோக்கமாகக் கொண்ட பெரும் எண்ணிக்கையான முன்னெடுப்புக்கள் முன்னேற்றங் கண்டன.** 2018-2019 காலப்பகுதியில் டிஜிட்டல் கல்வியை அறிமுகப்படுத்துவதற்கு 350 டிஜிட்டல் வகுப்பறைகளை நிறுவுவதற்கான முன்னோடி நிகழ்ச்சித் திட்டமொன்றிற்கு திட்டமிடப்பட்டது. இணையத்தளப் பயன்பாடு உயர்வடைந்தமையுடன் பாடசாலை மட்டங்களிலான இணையத்தளப் பாதுகாப்பு தயாரிப்படுத்தல் குழுக்களை நிறுவுவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 700 பயிற்சியாளர்கள் இம்முன்னெடுப்புக்களின் கீழ் சைபர் பாதுகாப்புத் தொடர்பிலும் ஏனைய தொடர்பான அம்சங்களிலும் பயிற்சியளிக்கப்பட்டனர். அதேவேளை, கல்வி அமைச்சு தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பக் கல்விக்காக தேசிய முதன்மைத்திட்டமொன்றை வடிவமைக்கின்ற செயன்முறையில் ஈடுபட்டிருந்தது. இலவசப் பாடசாலைச் சீருடைகளையும் சப்பாத்துக்களையும் பற்றுச்சீட்டுக்கள் ஊடாக 4.3 மில்லியன் மாணவர்களுக்கும் 720,000 மாணவர்களுக்கும் தொடர்ந்தும் வழங்கியது. இதன்மூலம் இவ்வாண்டுப்பகுதியில் ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூ.3.6 பில்லியனுக்கும் கூடுதலானதாகும். 5 தொடக்கம் 19 வயதினைக்கொண்ட மற்றும் 1 தொடக்கம் 13 தரங்களிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் நோய்கள், விபத்து மற்றும் ஏனைய காயங்களுக்கான நன்மைகளை வழங்குகின்ற 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டம் இவ்வாண்டுப்பகுதியில் ரூ.480 மில்லியன் தொகைகொண்ட காப்புறுதிக் கோரல்களை வழங்கியது.

**பொதுக் கல்வித் துறையில் அரசல்லா நிறுவனங்களின் ஈடுபாடு 2018ஆம் ஆண்டுப்பகுதியிலும் தொடர்ந்து அதிகரித்தது.** 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் பொதுக் கல்விப் பணிகளை வழங்குகின்ற அரசல்லா

நிறுவனரீதியான கட்டமைப்பு 106 தனியார் பாடசாலைகளையும் (பன்னாட்டு பாடசாலை நீங்கலாக) 759 பிரிவேனாக்களையும் உள்ளடக்கியிருந்தது. தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை (பன்னாட்டு பாடசாலைகள் நீங்கலாக) 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 138,526 மாணவர்களுக்கு 1.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் பிரிவேனாவில் கல்வியைப் பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 60,440 இற்கு 3.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2018இல் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட அளவீடு ஒன்றின் அடிப்படையில், இவ்வாண்டுப்பகுதியில் 294 பன்னாட்டுப் பாடசாலைகள் கல்விப் பணிகளை வழங்கி வருகின்றன. அத்தகைய பணிகளுக்கான கேள்வி அதிகரித்துவருகின்றமையின் காரணமாக கல்விப் பணிகளை வழங்குவதில் தனியார் துறையின் பங்கேற்பு அதிகரித்துவருகின்ற போதும் பொதுக் கல்வியின் தரத்தினை உறுதிப்படுத்தும்பொருட்டு இப்பணிகளை வழங்குகின்ற அனைத்து நிறுவனங்களையும் உள்ளடக்குகின்ற விதத்தில் ஒழுங்குவிதிகள், கண்காணிப்பு மற்றும் தர உத்தரவாதப் பொறிமுறைகளை வலுப்படுத்துவதற்கான தேவை அவசியமாகவுள்ளது.

அட்டவணை 3.10

**பல்கலைக்கழகக் கல்வியின் முக்கிய பண்புகள் (அ)**

| விடயம் | 2017 (ஆ) | 2018 (இ) |
|---|---|---|
| 1. பல்கலைக்கழகங்கள் (எண்ணிக்கை) | 15 | 15 |
| 2. ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் (எண்ணிக்கை) | 19 | 19 |
| 3. மாணவர்கள் (எண்ணிக்கை) (இளநிலை பட்டதாரிகள்) (ஈ) | | |
| பல்கலைக்கழகங்கள் (உ) | 88,527 | 94,681 |
| நிறுவகங்கள் | 3,423 | 3,633 |
| திறந்த பல்கலைக்கழகம் | 24,346 | 24,453 |
| 4. மொத்த அலுவலர்கள் (அனைத்துப் பல்கலைக்கழகங்கள்) (எண்ணிக்கை) | | |
| கல்விசார் | 5,669 | 5,940 |
| கல்விசாராத | 11,638 | 12,232 |
| 5. மாணவர்கள்/ ஆசிரியர்கள் விகிதம் | 17.7 | 18.4 |
| 6. வயது குறித்துரைக்கப்பட்ட இளநிலை பட்டதாரி மாணவர்களின் உள்ளெடுப்பு விகிதம் (19-23 வருடங்கள்) (ஈ) | 7.1 | 7.5 |
| 7. க.பொ.த (உ.த.) இருந்து பல்கலைக்கழகங்களுக்கு முன்னேற்றம் | | |
| பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோர் (%) | 60.99 | 64.40 |
| தகுதி பெற்றோர் சதவீத அடிப்படையிலான அனுமதி (%) | 19.10 | 19.10 |
| 8. பட்டம் பெற்ற மாணவர்கள் (எண்ணிக்கை) (ஊ) | 36,136 | வி.கி. |
| முதற் பட்டம் | 26,015 | வி.கி. |
| பட்டமேற்படிப்பு பட்டம் | 10,121 | வி.கி. |
| 9. முதற் பட்டத்திற்கான புதிய அனுமதிகள் (எண்ணிக்கை) (எ) | 30,668 | 31,451 |
| 10. பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் (எண்ணிக்கை) | 160,517 | 163,160 |

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்கள்
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) வெளிவாரிப்பட்ட கற்கை நெறிகள் நீங்கலாக
(உ) திறந்த பல்கலைக்கழகம் நீங்கலாக
(ஊ) வெளிவாரிப் பட்டம் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலாக
(எ) வெளிவாரிப் பட்டம் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் நீங்கலாக

*மூலம்:* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**அரசாங்கம் தனியார் துறையின் ஆதரவுடன் தரமான உயர் கல்வியின் தரத்ததையும் அணுகக்கூடிய தன்மையையும் மேம்படுத்தும் வழிமுறைகளினூடாக மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டது.** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகார வரம்பின் கீழுள்ள பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் சேர்ந்துகொண்ட மொத்த பட்டதாரி மாணவர்களின் தொகை புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமைக்கு இடையிலும் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் அதிகரித்தது. அதேவேளை இவ்வாண்டுப் பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இரண்டு புதிய பீடங்களுக்கும் 27 திணைக்களங்களுக்கும் 12 புதிய பட்டப்படிப்பிற்கும் ஏழு புதிய பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் ஒப்புதலை வழங்கியது. புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமைக்கிடையில் உயர் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளும் நடைமுறைக்கு இடப்பட்டன. இதற்கமைய, விரைவுபடுத்தப்பட்ட உயர் கல்வி விரிவாக்க மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டம் இவ்வாண்டுப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உத்தரவாதச் சபை இந்நாட்டின் உயர் கல்வித் துறையினை வலுப்படுத்துவதற்கான அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அதேவேளை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வியியலாளர்களின் அறிவுத் தளத்திற்கு உதவுவதற்காக பல்வேறுபட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் மேற்கொண்ட பல்வேறு உடன்படிக்கைகளினூடாக வாய்ப்புக்கள் உட்பட பட்டப்பின் படிப்புக் கல்வியைத் தொடர்வதற்கான நிதியியல் உதவிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. தனியார் துறையும் கூட அரச துறையில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களின் கிடைப்பனவிற்கு மத்தியில் கல்வி வாய்ப்புக்களை வழங்கியது. இதன்படி, 17 அரசல்லா உயர் கல்வி நிறுவனங்கள் 2018 இறுதியில் 122 பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கின. அரசல்லா உயர் கல்வி நிறுவனங்கள் துறையின் தர நியமங்களை உறுதிப்படுத்துவதற்காக, அங்கீகரித்தல் மற்றும் தர உத்தரவாத நிலையியல் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் உயர் கல்வி தொடர்பான கொள்கையினை அறிமுகப்படுத்துவதற்காகவும் முழுத் துறையினையும் ஒரு நிறுவனத்தின் கீழ் கொண்டு வருவதற்கான சட்ட ரீதியான கட்டமைப்பினை உருவாக்குவதற்காகவும் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பல்கலைக்கழகக் கல்வி முறைமையில் இத்தகைய அபிவிருத்திகள் இடம்பெற்று வருகின்ற போதும், பொருளாதாரத்தின் இயக்கவாற்றல் மிக்க ஒப்பீட்டு ரீதியான அநுகூலங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் பட்டதாரிகளின் தோற்றத்தினை மேம்படுத்துவதற்கான வலியுறுத்தல்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை 3.11
**மூன்றாந்தர மற்றும் தொழில்நிலைக் கல்வி மற்றும் பயிற்சியின் முக்கிய பண்புகள்**

| விடயம் | 2017 | 2018 (அ) |
|---|---|---|
| 1. பதிவு செய்யப்பட்ட மூன்றாந்தர தொழில்நிலைக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (எண்ணிக்கை) (ஆ) | 819 | 1,147 |
| அரசு | 333 | 525 |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் | 486 | 622 |
| 2. அங்கீகாரம் பெற்ற மொத்த கற்கை நெறிகள் (எண்ணிக்கை) | 2,972 | 2,089 |
| அரசு | 2,282 | 1,593 |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் | 690 | 496 |
| 3. வழங்கப்பட்ட தேசிய தொழில் பயிற்சி தகைமைச் சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | 65,212 | 61,150 |
| தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 6,104 | 8,818 |
| தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் அதிகாரசபை | 8,798 | 13,755 |
| தொழிற்பயிற்சி அதிகார சபை | 23,890 | 20,810 |
| தேசிய இளைஞர் பணிகள் ஆணைக்குழு | 1,219 | 1,780 |
| தனியார் | 25,201 | 15,987 |

(அ) தற்காலிகமானது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு

*மூலம்:* மூன்றாந்தர மற்றும் தொழில்நிலை கல்வி ஆணைக்குழு

**2018ஆம் ஆண்டுப்பகுதியில், தொழிற்படையின் தேர்ச்சி அபிவிருத்தி மட்டங்களை உயர்த்துவதற்காக தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி மற்றும் பயிற்சி துறை தொடர்ந்தும் கல்வி வாய்ப்புக்களை வழங்கியது.** அரச துறை, தனியார் மற்றும் அரசல்லா நிறுவனங்கள் இரண்டும் 2018 இறுதியில் பதிவுசெய்யப்பட்டிருந்த 525 அரச நிறுவனங்கள் மற்றும் 622 தனியார் மற்றும் அரசுசாரா நிறுவனங்களின் வலையமைப்பினூடாக தொழில்கல்வி மற்றும் பயிற்சியை வழங்குவதில் ஈடுபட்டிருந்தன. இந்நிறுவனங்கள் பரந்தளவிலான தொழில்நுட்பம் மற்றும் தொழில்பயிற்சித் துறைகளில் மொத்தமாக 2,089 அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகளை வழங்கின. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில் தொழில்நுட்ப மற்றும் தொழில்கல்வி மற்றும் பயிற்சித் துறை 61,150 தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ்களை வழங்கிய போதும் பல்கலைக்கழக முறைமைக்குள் உயர் கல்வி வாய்ப்புக்களைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றிராத இளைஞர்கள் இத்துறையினை நாடுவதனை அதிகரிப்பதற்காக அதன் இயலளவினை மேம்படுத்தும் அவசியம் காணப்படுகிறது. இதற்கமைய '13 வயதுவரைக்கான கட்டாயக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட பாடசாலைகளிலிருந்தான மாணவர்கள் 19 தெரிவுசெய்யப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலும் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் உள்ள பாடநெறிகளில் கலந்து கொண்டனர். 2018இல் மூன்றாந்தர மற்றும் தொழில் கல்வி' ஆணைக்குழு விரைவடைந்துவரும் தொழில்நுட்பவியல் மாற்றங்களை பூர்த்திசெய்யும் விதத்தில் பாடநெறிகளை மேம்படுத்துவதற்கும் தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி மற்றும் பயிற்சிப் பட்டதாரிகளின் தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்குமாக தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி மற்றும் பயிற்சி ஒழுங்குமுறைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான அறிக்கையொன்றை வரைந்திருக்கிறது.

## வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி

**அரசாங்கம் அதன் அதிகார வரம்பின் கீழ்வரும் நிறுவனங்களினூடாக 2018இல் வீடமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கும் நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குமாக பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டது.** வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு நகரமயமாக்கலின் தோற்றம் பெற்று வரும் போக்குகள் இயற்கை அனர்த்தங்களின் தாக்கம் மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் மனித குடியிருப்பு அபிவிருத்திகள் தாக்கம் என்பனவற்றை உள்ளடக்கும் விதத்தில் தேசிய வீடமைப்புக் கொள்கையைத் திருத்தும் கொள்கை வழிமுறைகளை மேற்கொண்டது. கொள்கையின் இறுதி வரைவு 2018இல் அமைச்சரவையின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. அதேவேளை, அமைச்சு இன்றைய தேவைகளுக்கு பொருந்தும் விதத்தில் வாடகைச் சட்டம் மற்றும் கூட்டுறுதி தொடர்மாடிமனை அதிகாரசபைச் சட்டம் என்பனவற்றைத் திருத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது. வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழான நடவடிக்கைகளுக்காக திறைசேரி 2018இல் ரூ.10.2 பில்லியனை ஒதுக்கியது. இது, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நிதியினையும் உள்ளடக்கியிருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் தாழ்ந்த வருமான குடும்பங்களுக்கான வீடமைப்பு, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள குடும்பங்களின் மீள்குடியேற்றம் மற்றும் பின்தங்கிய கிராமங்களின் உட்கட்டமைப்பு என்பனவற்றை வழங்குவதற்கான முன்னெடுப்புக்களை உள்ளடக்கியிருந்தன. மேலும், உள்ளக நிதியாக ரூ.1.2 பில்லியன் திரட்டப்பட்ட வேளையில் ஏனைய நிதியிடல் மூலங்களிலிருந்து ரூ.373.8 மில்லியன் தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் இவ்வாண்டுப்பகுதியில் 50 மாதிரிக் கிராமங்களின் கட்டுமான வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இச்செயற்றிட்டமானது ரூ.600 மில்லியன் செலவில் 1,200 வீடமைப்பு அலகுகளை நிர்மாணிப்பதற்கு அட்டவணையிட்டுள்ளது. அதேவேளை, இந்திய அரசாங்கம் 600 வீட்டலகுகளைக் கட்டுவதற்கு ஒவ்வொன்றும் ரூ.300 மில்லியன் கொண்ட நான்கு உதவிச் செயற்றிட்டங்களை வழங்குவதற்கு இணங்கியிருப்பதுடன், இரண்டு நாடுகள் இரு செயற்றிட்டங்களுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்திருக்கின்றன. குறைந்த வருமான நகர சமுகத்தினை இலக்காகக் கொண்ட 'லுணாவ நகர வீடமைப்புச் செயற்றிட்டம்' 2018 இறுதியில் ரூ.1,234 மில்லியன் கொண்ட நிதியியல் முன்னேற்றங்களைப் பதிவுசெய்திருக்கின்றன. அதேவேளை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள ஏறத்தாழ 17,400 குடும்பங்களுக்கு நன்மையளிக்கும் 'செமட்ட செவன'வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை மேற்கொண்ட வேளையில் அரச அலுவலர்களைக் கவனத்தில் கொண்டு ஒன்பது வீடமைப்புச்

3

செயற்றிட்டங்கள் 2018இல் ஆரம்பிக்கப்பட்டன. கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை உள்நாட்டுக் கட்டுமானக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளை நடைமுறைப்படுத்தியது. கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை தொழில்நுட்ப கணக்காய்வுப் பணிகளை வழங்குகின்ற தகைமை வாய்ந்த ஆட்களைப் பதிவுசெய்வதனையும் இக்கைத்தொழிலில் தரம் வாய்ந்த நியமங்களுக்கு ஆதரவளிப்பதற்காக தகைமைவாய்ந்த முகாமைத்துவக் கணக்காய்வாளர்களை பதிவுசெய்வதனையும் தொடங்கியது. அதேவேளை, கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை கட்டுமானக் கைத்தொழிலில் தொழிலாளர்களின் பற்றாக்குறையினைக் பூர்த்திசெய்வதற்காக தேர்ச்சிபெற்றவர்களாகும் விதத்தில் இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு 'சில்பா சவிய' உட்பட தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

3

**நாட்டின் நகர சமூகங்களை அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை பெருநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது.** இந்நடவடிக்கைகள் போக்குவரத்துத் துறை தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்களை உள்ளடக்கியிருந்தது. மேற்குப் பிராந்திய பெருநகர் முதன்மைத் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட போக்குவரத்துப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக 'ஒரு ஊர்தியை நிறுத்திவிட்டு வேறு ஒன்றில் பயணம் செய்தல்' மீளமைத்தல் மற்றும் பேருந்துப் பணிகளைத் திருத்தியமைத்தல், பேருந்திற்காக முன்னுரிமைப் பாதைகளை நடைமுறைப்படுத்தல் என்பன பற்றிய கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட பல்மாதிரி போக்குவரத்து நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. இதற்கமைய, மாகும்புற பல் மாதிரிப் போக்குவரத்து நிலையத்தின் அனைத்து அமைப்பு வேலைகளும் 2018 இறுதியில் முடிவடைந்த வேளையில் கடவத்தை பல் மாதிரிப் போக்குவரத்து நிலையத்தின் முதற்கட்டத்துடன் தொடர்பான நிர்மாண வேலைகள் 2018 ஒத்தோபரில் ஆரம்பித்தன. அதேவேளை, பொதுப் போக்குவரத்தினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு 2017இல் ஆரம்பிக்கப்பட்ட பேருந்து முன்னுரிமை பாதைத் திட்டம் 2018 இலும் தொடர்ந்ததுடன் 2019இன் முதலரைப்பகுதியில் நிறைவுசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்குப்பிராந்திய இலகு புகைவண்டிப் போக்குவரத்துச் செயற்றிட்டத்தின் சாத்தியவள ஆய்வுகள் 2018இல் நிறைவடைந்ததுடன் அமைச்சு சாத்தியவள ஆய்வினை 2019 தொடக்கத்தில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கின்றது. இது தொடர்பில் இலகு புகைவண்டிப் போக்குவரத்துப் பாதையின் பொறியில் பணிகள் மற்றும் கட்டுமானத்திற்கான கடன் உடன்படிக்கையொன்று இலங்கை அரசாங்கத்திற்கும் யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவருக்குமிடையே 2019 மாச்சில் கையெழுத்திடப்பட்டது. சமூக தாக்கம் தொடர்பான மதிப்பீடு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைத் திட்டம் என்பன 2019 ஏப்பிறல் அளவில் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கின்ற வேளையில் சூழல் தாக்க மதிப்பீடு 2019 யூன் அளவில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, அரச போக்குவரத்து முறைமைகளில் காணப்படும் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக 2018இல் வடிவமைக்கப்பட்ட 'சாகசர' செயற்றிட்டத்திற்காக அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. இச்செயற்றிட்டமானது நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு சிறந்த பேருந்துப் பயணிகள் பணிகளை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கொழும்பு நீரேந்துப் பரப்புக்களில் ஏற்படும் வெள்ள நிலைமையைக் குறைக்கும் நோக்குடனான பெருநகர் கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்றிட்டம் புனரமைத்தல் உள்ளூர் உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தல் மற்றும் பேணுதல் என்பனவற்றிற்காக கொழும்பு பெருநர் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் இயலளவினை பலப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திச் செயற்றிட்டத்துடன் தொடர்பான வேலைகள் 2018இல் தொடர்ந்தன. 2018 இறுதியளவில் நில மீட்பு நடவடிக்கைகளில் ஏறத்தாழ 95 சதவீதம் நிறைவடைந்ததுடன் தரைமேம்பாட்டுப் பணிகளில் ஏறத்தாழ 80 சதவீதமும் முதலீட்டின் வெளிநாட்டுக் கூறின் கீழான வடிவமைப்பு வேலைகளில் 97 சதவீதமும் நிறைவடைந்தன. துறைமுக நகரின் நிலமீட்பு நடவடிக்கைகள் 2019 சனவரியில் நிறைவடைந்தன. இச்செயற்றிட்டம் நிறைவுபெறுகையில் நிதியியல் மையங்கள், ஆடம்பர வதிவிடங்கள் அலுவலக கட்டடங்கள் என்பனவற்றை உள்ளடக்கக்கூடிய உலகத்தரம்வாய்ந்த நகரமொன்று உருவாக்கப்பட்டிருக்கும் அதேவேளை, முதலீட்டின் உள்நாட்டு கூறுகளின்கீழ் புதிய களனிப் பாலம் மற்றும் துறைமுகத்தை இணைக்கின்ற உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை என்பனவற்றின் கட்டுமாணம் இவ்வாண்டிலும் தொடர்ந்தது. மேலும் துறைமுகத்தை அணுகும் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையை இணைக்கின்ற நிலத்தின்கீழான கடற்கரையோரப் பாதையை விரிவாக்குவதற்கான சாத்தியவள ஆய்வும் சூழல் தாக்க மதிப்பீடும் நிறைவடைந்துள்ளன.

**பெருநகர் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபை 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் நகர அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது.** நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடாத்தப்பட்ட அளவீடொன்று மொத்தமாக 68,812 குடும்பங்கள் 1,499 வசதிகுறைந்த குடியிருப்புக்களில் வதிவதாக அடையாங்கண்டிருக்கிறது. இதன்படி, பெருநகர்

மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு சேரிகள் மற்றும் ஏனைய அழிவடைந்த வீடமைப்புக்களை கொழும்பு மாநகரத்திலிருந்து ஒழித்தல் மற்றும் வதிவோரை நவீன வீடுகளுக்கு மீளவதியச் செய்தல் ஆகிய நோக்கங்களுடன் நகர மீள் உருவாக்கச் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. இச்செயற்றிட்டத்தின்கீழ் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் 2018 இறுதியளவில் ரூ.17.1 பில்லியன் செலவினத்துடன் தொடர்புபட்டவாக இருந்தன. நகரப்பிரதேசங்களில் நடுத்தர வருமான வீடமைப்பிற்கான கேள்வி அதிகரித்துவருகின்றது. நடுத்தர வருமானத் தொகுதியினரின் கேள்வியைப் பூர்த்திசெய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை பல வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தது. இது, வர்த்தக வங்கிகளிலிருந்து சாதகமான நியதிகளின்கீழ் கடன்களைப் பெறுவதற்கான வசதிகளுடன் அரச துறை ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தினை உள்ளடக்கியிருந்தது. அதேவேளை, வதிவோர் மற்றும் வதிவற்றோரிடமிருந்தான வீடமைப்புக்களுக்கான அதிகரித்த கேள்வியின் காரணமாக வீடமைப்பு அலகுகளை வழங்குவதில் குறிப்பாக கூட்டுறுதித் தொடர்மாடி மனை வழங்குவதில் தனியார் துறையின் ஈடுபாடு அண்மைக்காலங்களில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்திருக்கிறது.

## வறுமை ஒழிப்பு மற்றும் பாதுகாப்பு வலையமைப்பு

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின்படி வீட்டலகுகள் மற்றும் செலவின அளவீடு, 2016 இன்படி நாட்டின் வறுமை மட்டம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகிறது.** இதன்படி வறுமை எண்ணிக்கை விகிதம் 2016இல் 4.1 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், குடித்தொகையின் கணிசமமான வீதத்தினர் வறுமை மட்டத்திற்கு சற்று மேலே வசிப்பதுடன் இயற்கை அனர்த்தங்கள், அடிப்படை பண்டங்களின் விலை அதிகரிப்புக்கள் போன்ற அதிர்வுகளின் காரணமாக வறுமையின் ஆரம்ப மட்டத்திற்கு கீழே வீழ்ந்துவிடக்கூடிய உயர்ந்த இடர்நேர்வினை கொண்டிருக்கின்றனர். அதேவேளை, உலக வங்கியின் பகுப்பாய்வின்படி, 2012இன் 1.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் இலங்கையின் குடித்தொகையில் 0.8 சதவீதத்தினர் நாளொன்றுக்கான ஐ.அ.டொலர் 1.90 கொண்ட (2011இல் கொள்வனவு வலுச் சமநிலை நியதிகளில்) பன்னாட்டு வறுமைக் கோட்டிற்கு கீழே காணப்பட்டனர். 2016இல் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 3.20 இனைக் கொண்ட தாழ்ந்த நடுத்தர வருமானத்தினையும் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 5.50 இனைக் கொண்ட உயர் நடுத்தர வருமானத்தையும் கொண்ட வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடித்தொகையினர் முறையே 10.1 சதவீதத்தினராகவும் 40.4 சதவீதத்தினராகவும் காணப்பட்டனர். எனவே, வறுமை எண்ணிக்கை விகிதத்தினூடாக பிரதிபலிக்கப்பட்டவாறு

அட்டவணை 3.12
தலைக்குரிய வறுமை விகிதம் (சதவீதம்)

| துறை | 2002 | 2006/07 | 2009/10 | 2012/13 | 2016 |
|---|---|---|---|---|---|
| **இலங்கை** | **22.7** | **15.2** | **8.9** | **6.7** | **4.1** |
| நகரம் | 7.9 | 6.7 | 5.3 | 2.1 | 1.9 |
| கிராமம் | 24.7 | 15.7 | 9.4 | 7.6 | 4.3 |
| பெருந்தோட்டம் | 30.0 | 32.0 | 11.4 | 10.9 | 8.8 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்த போதும் அனைத்து வறுமை மட்டங்களுக்கும் மேலே மக்களை உயர்த்துவதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் தேவைப்படுகின்றன. அதேவேளை, மாவட்ட மட்டத்தில் வறுமை எண்ணிக்கை விகிதத்தில் பரந்தளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. வீட்டலகு மற்றும் செலவின அளவீடு - 2016இல் அறிக்கையிடப்பட்டவாறு, கொழும்பு மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட 0.9 சதவீதம் கொண்ட மிகக்குறைந்த மட்டத்துடன் ஒப்பிடுகையில் 18.2 சதவீதத்தைக் கொண்ட வறுமை எண்ணிக்கை விகிதத்தின் உயர்ந்த மட்டம் கிளிநொச்சில் பதிவுசெய்யப்பட்டது. முழுமையான நியதிகளில் வறுமைக்கான பங்களிப்பிற்கான உயர்ந்த வீதம் 9.1 சதவீதத்தில் கண்டியில் பதிவுசெய்யப்பட்ட வேளையில் மிகக் குறைந்த பங்களிப்பான 0.1 சதவீதம் மன்னார் மாவட்டத்தில் காணப்பட்டது. மேலும், தொடர்பான காலப்பகுதியில் வறுமை எண்ணிக்கைச் சுட்டெண் உறுதியான வீழ்ச்சியொன்றைக் காட்டிய போதும் வருமானப் பங்கீடு ஒப்பீட்டு ரீதியில் ஒரே மட்டத்திலேயே காணப்பட்டது. கினிகுணகத்தினூடாக அளவிடப்பட்டவாறு வீட்டலகுகளின் வருமானச் சமமின்மையானது 2016இல் 0.45 ஆக அமைந்து வீட்டலகு மற்றும் செலவின அளவீடு 2012/13இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட 0.48 கினிகுணகத்துடன் ஒப்பிடுகையில் சிறிதளவு முன்னேற்றத்தினைக் காட்டியது.

**சமூக பாதுகாப்பு வலையமைப்பினை வழங்குவதனையும் வறுமை ஒழிப்பினையும் நோக்காகக் கொண்ட அநேக அரச முன்னெடுப்புக்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் தொடர்ந்தும் இடம்பெற்றன.** இது தொடர்பில் இவ்வாண்டுப்பகுதியில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. இது சமுர்த்தி உதவுதொகை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகள் திட்டம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், பின்னைய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 282,013 நன்மைபெறுநர்களிடையே ரூ.1.2 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்ட வேளையில், சமுர்த்தி வங்கித்தொழில் சங்கங்கள் தொழில்முயற்சியாளர்களுக்கு நுண்பாகக் கடன்களைத் தொடர்ந்தும் வழங்கியது. அதேவேளை, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வலுவூட்டல் திட்டத்தின்படி, ஐக்கிய நாடுகளின் 2030ஆம் ஆண்டில் வறுமையை ஒழிப்பதற்கான

அட்டவணை 3.13

பிரதான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் - நன்மைபெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் கொடைகளின் பெறுமதியும்

| ஆண்டு | திவிநெகும / சமுர்த்தி மானிய நிகழ்ச்சித்திட்டம் | | சத்துணவு முற்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் | | உலர் உணவு நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|---|---|---|---|
| | குடும்பங்கள் (எண்ணிக்கை) (அ) | பெறுமதி (ரூ.மில்லியன்) (ஆ) | பயனாளர்கள் (எண்ணிக்கை) (அ) | பெறுமதி (ரூ.மில்லியன்) | பெறுமதி (ரூ.மில்லியன்) |
| 2014 | 1,479,811 | 15,042 | 47,858 | 279 | 28 |
| 2015 | 1,453,078 | 39,994 | 101,200 | 2,422 | 118 |
| 2016 | 1,407,235 | 40,740 | 337,554 | 5,746 | 111 |
| 2017 | 1,388,242 | 39,707 | 372,407 | 5,408 | 84 |
| 2018 | 1,384,021 | 39,239 | 329,047 | 5,490 | 58 |

(அ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு
(ஆ) மண்ணெண்ணெய் மானியம் உள்ளடங்கலாக

மூலங்கள் : சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
பெண்கள் மற்றும் பிள்ளைகள் விவகார அமைச்சு
நிதி அமைச்சு

3

நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இவ்வாண்டில் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, சுயதொழில் வாய்ப்புக்களுடன் சேர்த்து வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி செயற்றிட்டங்களூடாகவும் கைத்தொழில் அபிவிருத்தி செயற்றிட்டங்களூடாகவும் குடும்பங்களுக்கு வலுவூட்டுவதற்காக 2018இல் ரூ.910 மில்லியன் செலவில் 21,412 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும், வரவு செலவுத்திட்டம் 2019 ஏறத்தாழ 600,000 வீட்டலகுகளுக்கு மேலதிக வசதிகளை வழங்குவதற்கு முன்மொழிந்திருக்கின்ற வேளையில் கூடியளவிற்குக் காத்திரமான தன்மையை ஏற்படுத்தும் பொருட்டு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றது. வரவு செலவுத்திட்டம் 2019 ஆண்டுப்பகுதியில் சமுர்த்தி கட்டாய சேமிப்பிலிருந்து இரண்டு தவணைகளில் ரூ.30,000 வரை எடுப்பனவு செய்வதனை அனுமதிப்பதற்கு முன்மொழிந்திருக்கிறது. அதேவேளை, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள், வரண்டவலய அபிவிருத்தி அமைச்சு, கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முன்பள்ளிச் சிறுவர்களின் ஊட்டச்சத்து நிலைமையை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளின் ஊட்டச்சத்திற்கு உதவும் பொருட்டு வரவு செலவுத்திட்டம் 2019 நாட்டின் கிராமியப் பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு ஒரு குவளைப் பாலினை இலவசமாக வழங்குவதற்கு முன்மொழிந்திருக்கிறது. குடித்தொகையின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் நலனோம்புகைகளை மேம்படுத்துவதற்காக அநேக வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் காத்திரமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான பல்பரிமாண வழிமுறைகளூடாக அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தகைமை வாய்ந்த பெறுநர்களை மதிப்பிடுவதற்காக பொறிமுறை ஒன்றை நடைமுறைக்கிடுவது அவசியமானதாகும். நலன்புரி நன்மைகள் சபை நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களின் திட்டமிடல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடலுக்கான காத்திரமான தளமொன்றினை வழங்கும் நோக்கத்தினை பாதுகாக்கும் விதத்தில் தேசிய சமூக பதிவகமொன்றினை உருவாக்கும் செயன்முறையில் ஈடுபட்டிருக்கிறது. தேசிய சமூகப் பதிவகம் நடைமுறைப்படுத்தப்படுகையில் நாட்டிலுள்ள நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களின் சிறந்த திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் இணைத்தல் என்பனவற்றிற்கு வசதியளிக்கின்ற போதும் ஆங்காங்கே துண்டு துண்டாகக் காணப்படும் வறுமை நிகழ்வுகள், மாற்றமடைந்துவரும் குடித்தொகையியல் நிலைமைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களின் அதிகரித்த சம்பவங்கள் போன்றன வறுமை ஒழிப்பில் சவால்களை ஏற்படுத்துகின்றன. தேசிய சமூக பதிவகமொன்றினை நிறுவுதல் உண்மையில் தேவையான மக்களுக்கு வழங்கலை வழிப்படுத்துவதன் மூலம் மூலவளங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதற்கு உதவியளிக்கிறது.

## சுற்றாடல்

**நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியை எய்துவதற்கு சுற்றாடல் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்கு இடையே சமநிலையொன்றினைப் பேணும் பொருட்டு சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக நிறுவன ரீதியான கட்டமைப்பொன்றினை வலுப்படுத்தும் அதன் முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொண்டது.** இதன்படி, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அனர்த்த இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக 2018ஆம் ஆண்டுப் பகுதியில் பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது. மண்சரிவுகளை குறைத்தல் மற்றும் நிலச்சரிவுகளை உறுதிப்படுத்தும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல், பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களை மீளக்குடியமர்த்தல் என்பன அனர்த்தப் பாதிப்புக்களைக் குறைப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளாகும். மேலும், பாதிக்கப்படக்கூடிய சமூகத்தினரை சரியான நேரத்தில் வெளியேற்றுவதனை அனுமதிப்பதற்கு நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுக்கும் முறைமை வலுப்படுத்தப்பட்டது. அதேவேளை, அனர்த்தத்துடன் தொடர்பான மாவட்ட மட்ட இரண்டாந்தர தரவு முறைமைகளை நிர்மாணித்தல், அனர்த்தங்கள் உள்ளடக்கப்பட்டமை மற்றும் அனர்தத்தினால் பாதிக்கப்படக்கூடிய பகுப்பாய்வுகள் என்பன

அனர்த்த இடர்நேர்வு மதிப்பீடுகளுக்கான முறையியலின் முக்கிய கூறுகளாகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் இடர்நேர்வுச் சுட்டெண் தயாரிக்கப்படவுள்ளது. மேலும், தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டுச் செயற்றிட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக இடர்நேர்வு மதிப்பீடுகளின் நடைமுறை அம்சங்களை உள்ளடக்கிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அலுவலர்களுக்காகவும் ஏனைய ஆர்வலர்களுக்காகவும் இடர்நேர்வு மதிப்பீட்டுச் செயற்றிட்டத்தின் கீழ் அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் காத்திரமான அவசரகால பதிலிறுப்புக்களுக்கான அனர்த்த இடர்நேர்வு மதிப்பீடுகளின் பிரயோகம் தொடர்பான தேசிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று 2018இல் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, வளிமண்டலவியல் திணைக்களம் கடல் சார்ந்த நடவடிக்கைகளுக்காக 111 எச்சரிக்கைகளையும் தரைப்பிரதேசங்களுக்காக 60 எச்சரிக்கைகளையும் விடுத்தது. மேலும், 2018இல் வங்காளவிரிகுடாவில் உருவாகி இலங்கையை நோக்கி நகர்ந்த இரண்டு கடுமையான சூறாவளிகளான 'கஜா'மற்றும் 'பெத்தை' என்பனவற்றை எதிர்த்து நிற்கக்கூடிய விதத்தில் நேரகாலத்துடன் ஆயத்தங்களை மேற்கொள்வதற்காக, பொதுமக்கள் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் மீன்பிடித் திணைக்களம் என்பனவற்றிற்கு உரிய காலத்தில் மதியுரைகளையும் எச்சரிக்கைகளையும் வழங்கியது.

**மத்திய சுற்றாடல் அதிகார சபை இலங்கையின் மூலவளங்களையும் அதன் சுற்றாடலையும் பாதுகாத்து முகாமைசெய்து உயர்த்துவதற்கான அதன் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது.** இதற்கமைய, மத்தய சுற்றாடல் அதிகார சபை சான்றிதழ்களையும் உரிமங்களையும் வழங்குதல் புதிய சுற்றாடல் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுதல் என்பனவற்றுடன் சுற்றாடல் தொடர்பான விடயங்கள் மீதான தேசிய நியமங்கள், பிரமாணங்கள் மற்றும் வழிகாட்டல்களையும் தொடர்ந்தும் நடைமுறைக்கிட்டு வருகின்றது. மத்திய சுற்றாடல் சபை செயற்றிட்டங்களின் சுற்றாடல் சாத்தியவளத் தன்மைகளின் அடிப்படையில் சுற்றாடல் தாக்க மதிப்பிடுவதற்கும் மற்றும் ஆரம்ப சுற்றாடல் பரீட்சிப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கும் செயற்றிட்டங்களை மதிப்பிடுவதற்கு பொறுப்பாக இருக்கிறது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய சுற்றாடல் அதிகார சபை 17 செயற்றிட்டங்களுக்காக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் சான்றிதழ்களையும் 306 செயற்றிட்டங்களுக்கான ஆரம்ப சுற்றாடல் பரீட்சிப்புச் சான்றிதழ்களையும் வழங்கிய வேளையில் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களையும் சுற்றாடல் பாதுகாப்பு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறையொன்றாக கைத்தொழில்களுக்கு தொடர்ந்தும் வழங்கிவந்தது. மேலும், மத்திய சுற்றாடல் அதிகார சபை பொலித்தீன் பயன்பாட்டினை ஒழுங்குமுறைப்படுத்தல் தற்போதுள்ள சூழல் தாக்க மதிப்பீட்டுச் சட்டங்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் முன்னேற்றுதல் தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களின் சுமூகமான தொழிற்பாடு, பிரகடனம் மற்றும் முகாமைத்துவத்திற்காக ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகள், தீங்குபயக்கும் கழிவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் என்பனவற்றை நடைமுறைப்படுத்தல் நீரின் தரம் தொடர்பில் நாட்டிலுள்ள முக்கிய நீர்நிலைகளைக் கண்காணித்தல் மற்றும் சூழலின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக கழிவு முகாமைத்துவச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பனவற்றில் ஈடுபட்டிருந்தது.

**காட்டுத் திணைக்களம் நாட்டிளது காட்டின் பரப்பளவை அதிகரிப்பதைக் கவனத்திற்கொண்டு தொடர்ந்தும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது.** இவ்வாண்டுப்பகுதியில் காட்டுத் திணைக்களம் 977 எக்டேயர்களில் மீள்காடாக்கலை மேற்கொண்டது. மேலும், உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள்காடாக்கல் நிகழ்ச்சித்திட்டத்திற்கும் உதவியது. 2017இல் தொடங்கிய இந்நிகழ்ச்சித்திட்டம் 2018 இலும் வெற்றிகரமாகத் தொடர்ந்தது. இதன்படி, 'வனரோபா' என அழைக்கப்படும் தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் மொத்த நிலப்பரப்பில் காட்டுப்பரப்பினை 29.7 சதவீதத்திலிருந்து 32.0 சதவீதத்திற்கு அதிகரிக்கின்ற இலக்கினை எய்தும் நோக்குடன் இவ்வாண்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், காடழித்தல் மற்றும் காடுகளைத் தரம்குன்றச் செய்தலிலிருந்து தோன்றுகின்ற சுற்றாடல் பாதிப்புக்களை குறைப்பதன் மீதான ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியுடன் இலங்கை ஐந்தாண்டுகளுக்கான (2018 - 2022) பல்வேறு கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை உள்ளடக்கிய தேசிய காடழித்தல் மற்றும் காடுகளைத் தரங்குன்றச் செய்தல் முதலீட்டுக் கட்டமைப்பு மற்றும் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரித்தது. 2018இல் மீள்காடாக்கலின் நிலப்பரப்பு 2017 இனைவிட 2.2 சதவீதத்தினால் அதிகரித்தது. காடு தொடர்பான குற்றச்செயல்கள் முன்னைய ஆண்டுகாலப்பகுதியின் 3,887 இலிருந்து 2018இல் 3,757 இற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் சட்டத்திற்கு முரணான விதத்தில் மரங்களை வெட்டுதல் தொடர்பில் கண்டுபிடிக்கப்பட்ட மரங்களின் பெறுமதி 2018இல் 7.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மேலும், இலங்கை வான்படையினால் மேற்கொள்ளப்பட்ட ஆகாயத் தொழிற்பாடுகளின் போது வடமத்திய பிராந்தியத்திலுள்ள காட்டு ஒதுக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 'விதைதூவும' ஒருமுகப்படுத்தப்பட்ட பணிகள் உட்பட, இவ்வாண்டுப்பகுதியில் மொத்த காட்டுப் பரப்பளவினை உயர்த்துவதற்கு தனியார் துறையும் மீள்காடாக்கல் செயற்றிட்டங்களை ஆரம்பித்தது.